Registerd as a News Paper at the G.P.O
Srilanka, Under No.KJV 59/87

பக்கங்கள் 10 விலை 12/-

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை
JAFFNA DISTRICT CO-OP. COUNCIL

# ஐக்கிய தீபம்

# AIKIYA THEEPAM

நாம் பலவீனமானவர்
களாக இருக்கிறோம்
அதனால்தான்
துன்பப்படுகின்றோம்.
-சுவாமி
விவேகானந்தர்-

தீபம் 01 புரட்டாதி 2005 ஒளி - 6




கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் 2005 யூலைத் திங்கள் 30ம் திகதி, அவரது கூட்டுறவுப் பணியை மேற்கொண்டுவரும் தலைவர்களுள் ஒருவரான யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு.பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற முதலாவது கூட்டுறவு மாநாடு.

பெரியார் வீரசிங்கம் சிலை



கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தின் எழில்மிகு தோற்றம்

தலைவர் மாலை சூட்டுகின்றார்




கூட்டுறவுச் செய்தியுடன் பணியாளர்கள்

கூட்டுறவுச் செய்தி கையளிக்கப்படுகிறது

பேரணியில் கூட்டுறவாளர்களும் பணியாளர்களும்

கூட்டுறவு தின விழாவில் கூட்டுறவாளர்களும் பணியாளர்களும்

மலராசிரியர்: மு.வாமதேவன்

**கூட்டுறவே நாட்டுயர்வு**

# கூட்டுறவு மாநாட்டுக் காட்சிகள்



கூட்டுறவு செய்தி கொண்டு செல்லும் மரதன் அணியின் ஆயத்த நிலையில்....




கூட்டுறவு மாநாட்டை ஆரம்பித்து தலைவர் உரையாற்றுகின்றார்....



யாழ்.அரச அதிபர் க.கனேஸ் உரையாற்றுகின்றார்.



கூட்டுறவு மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் உரையாற்றுவதையும் மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றலில் இருந்து ஆரம்பமான

# கூட்டுறவாளர் பேரணியும் ஊர்தி பவனியும்

கூட்டுறவாளர் வீரசிங்கம் சிலைக்கு கூ.சிறில் மாலை அணிவிக்கின்றார்.













# கூட்டுறவு தின விழா காட்சிகள்







இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவில் விருந்தினர்கள் உரை யாற்றுவதையும் விழாவில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

# கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டில் முன்மொழியப்பட்ட பிரேரணைகள்

***30.07.2005 அன்று கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டில் உடுப்பிட்டி, நெடுந்தீவு, காரைநகர், அளவெட்டி, மல்லாகம், பருத்தித்துறை, வலிகிழக்கு, தென்பகுதி (நீர்வேலி), பண்டத்தரிப்பு, கட்டைவேலி - நெல்லியடி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும்; யாழ். மாவட்டக் கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைசபை ஆகியன யாழ். அரசாங்க அதிபரிடம் முன்வைத்த பிரேரணைகளின் விபரம் வருமாறு:***

## யாழ். அரச அதிபரிடம் முன் வைத்த கோரிக்கைகள்

### இழப்பீடுகளைப் பெற்றுத்தரவும்

கடந்தகாலங்களில் நாட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான யுத்த நடவடிக்கைகளினாலும், இடப்பெயர்வுகளினாலும், கூட்டுறவுச் சங்கங்கள் பாரியளவிலான சொத்துக்களை இழந்த நிலையில், சங்கச் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதில் பாரிய நிதி நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. இவ்விழப்புக்களை அரசாங்கத்திடம் இருந்து சங்கங்களுக்குப் பெற்றுத் தரவேண்டும்.

கூட்டுறவு ஊழியர்களிற்கு அண்மைக் காலத்தில் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வுகளினால் இலாபத்தில் 95% இற்கு மேலான தொகை சம்பளமாக வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் ஏனைய செலவுகளிற்கும் இலாபம் போதாமையினால் பாரிய நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றது. இப்பாரிய நட்டங்களில் இருந்து கூட்டுறவுச் சங்கங்களையும் கூட்டுறவுப் பணியாளர்களையும் மீட்டெடுப்பதற்காக 1970ஆம் ஆண்டு காலங்களில் இருந்தது போன்று கூட்டுறவுச் சங்கங்களிற்கான சில பொருட்கள் மீதான விநியோகத்தில் தனியுரிமை பெற்றுத்தர வேண்டும் எனக் கோருகின்றோம்.

*பிரேரித்த சங்கம் :* அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்

1996 ஏப்பிரல் மாதம் நடைபெற்ற சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை இரண்டின்போது எமது சங்க லொறியை இராணுவம் கைப்பற்றி 3 மாதங்களிற்கு மேலாகத் தனது பாவிப்புக்கு உட்படுத்தியது. மீண்டும் சங்கத்திற்கு லொறியைப் பாரப்படுத்தும்போது மிகவும் கேவலமான நிலையிலும் பாவிக்க முடியாத நிலையிலும் இருந்துள்ளது. எமது சங்கத்தின் நிதிப்பற்றாக்குறை காரணமாக அவ்லொறியை புனரமைப்புச் செய்ய முடியாதுள்ளது. இதனால் எமக்கு ஒரு புதிய லொறியைக் கூட்டுறவு அமைச்சு தரவேண்டும். அல்லது புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சிடம் இருந்து பெற்றுத்தர வேண்டுமெனக் கோரப்படுகின்றது.

*பிரேரித்த சங்கம் :* அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்

### வட்டியில்லாத கடன் கோரிக்கை

கூட்டுறவுச் சங்கங்கள் இழப்புக்களின் காரணமாக தற்போது எதிர்நோக்கும் பாரிய நிதி நெருக்கடியை ஓரளவுக்கேனும் குறைத்துத் தனது செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் வட்டியில்லாக் கடனாக தலா 5,000,000/- விதம் கூட்டுறவுச் சங்கங்களிற்கு நீண்டகால கடன்தர அரசைக் கோருதல்.

*பிரேரித்த சங்கம் :* உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்

### உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல்

எமது மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் முக்கிய விளைபொருட்களை (வெங்காயம், மிளகாய்) அப்பிரதேச கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமான விலையில் உற்பத்தியாளரிடம் கொள்வனவு செய்து அவற்றைக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்கக் கூடியதாகக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் யாழ். மாவட்டத்தின் மையத்தில் விளைபொருள் கொள் வனவு நிலையம் ஒன்றை அமைத்து நடைமுறைப் படுத்தக்கோருதல்.

*பிரேரித்த சங்கம் :* பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்

### பணியாளர் கொடுப்பனவு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பணியின் சுமார் 50% ஆன நேரத்தையும் சங்கத்தின் வளங்களையும அரசாங்கத்தின் நிவாரண விநியோக சேவைகளில் செலவு செய்து வருகிறது. அத்துடன் தற்போதைய சம்பள அதிகரிப்புகள் மத்தியில் சங்கங்கள் போதிய இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடியாத நிலையிலும் காணப்படுகிறது. எனவே கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் கொடுப்பனவில் 25% அரசை வழங்கக் கோருதல்.

*பிரேரித்த சங்கங்கள்:* உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம், பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

### கையாளல் கொடுப்பனவை அதிகரிக்கவும

அரசாங்கம் தனது கடமைகளாக மக்களுக்குச் செய்யும் சேவைகளில் ப.நோ.கூ.சங்கங்களை ஈடுபடுத்தும்போது அவற்றிற்கு எரிபொருள் விலையேற்றத்தால் அதிகரிக்கும் இழுவைக்கூலி, வாழ்க்கைச் செலவு ஏற்றத்தால் அதிகரித்த சம்பளம் என்பனவற்றை ஈடு செய்யும் வகையில் அதற்கான கையாளல் கொடுப்பனவை ப.நோ.கூ. சங்கங்களிற்கு அதிகரித்து வழங்க வேண்டும்.

*பிரேரித்த சங்கம் :* கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

ஒப்பந்த வேலைகள் தொடர்பாக யாழ். மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களினால் மற்றும் அரசாங்க அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் வேலைகளைப் பொதுவாகக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவேண்டும்.

*பிரேரித்த சங்கம் :* கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்குச் செய்து கொடுக்கும் வேலைத்திட்டத்துக்கான மூலப்பொருட்களை ப.நோ.கூ. சங்கங்களிலிருந்து கொள்வனவு செய்து விநியோகிக்க வேண்டும்.

*பிரேரித்த சங்கம் :* கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தித் திட்டங்களின் வளர்ச்சிக்காக நாட்டில் தற்போது இயங்கிவரும் அரசசார்பற்ற நிறுவனமொன்றைத் தனியாகக் கூட்டுறவுத்துறைக்கு நிதி வழங்கும் நிறுவனமாக அங்கீகரித்துத் தரும்படியும்.

1995ம் ஆண்டு ஒக்ரோபர் 31ம் திகதி இடம்பெயர்ந்த போது நிவாரண இருப்புப் பொருட்கள் முழுவதையும் கைவிட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வலிகாமம் பகுதியை விட்டு வெளியேறின. இந்நிலையில் இந்த இருப்புப் பொருட்களின் பெறுமதியைக் கழித்து எழுதும்படியும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரைக் கோருகிறோம்.

*பிரேரித்த சங்கம்:* யாழ்.மாவட்ட கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச் சபை.

## வடபிராந்திய மக்கள் வங்கி உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை

### குறைந்த வட்டியில் கடன்பெறும் சலுகை

மக்கள் வங்கி 1961ஆம் ஆண்டு நிறுவப்பட்டபோது செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளின்படி 50% மூலதனம் அரசினாலும் 50% மூலதனம் கூட்டுறவு நிறுவனங்களினதுமாக இருக்க வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் பின்பு மக்கள் வங்கி அரசுடமையாக்கப்பட்டது. மக்கள் வங்கியின் சொத்துக்களில் கூட்டுறவுத்துறையின் சொத்துக்கள் இணைக்கப்பட்டு விட்டது. கூட்டுறவுச் சமஷ்டி வங்கி, யாழ்ப்பாண மாகாண கூட்டுறவு வங்கி ஏனைய பல மாவட்ட கூட்டுறவு வங்கிகளின் சொத்துக்கள் தற்போது மக்கள் வங்கியின் சொத்தாக மாறியுள்ளன. இன்றைய நிலையில் எமது வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கடுமையான இழப்புக்களைச் சந்தித்ததன் பயனாக பாரிய நட்டங்களை அடைந்து செயற்படமுடியாத நிலையில் இச்சங்கங்களைக் கைதூக்கிவிட மக்கள் வங்கி உதவிபுரிய வேண்டும். மிகக்குறைந்த வட்டியில் சலுகைக் கடன்களை வடக்குக் கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டும். இத்திட்டத்தை யாழ். மாவட்டத்தில் உடனடியாக நடைமுறைப்படுத்த மக்கள் வங்கி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

*பிரேரித்தது:* யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை

### பிடித்து வைத்தல் வரியை நீக்கக் கோருதல்

மக்கள் வங்கியினால் சங்கங்களின் நிலையான வைப்பிற்கு பிடித்து வைத்தல் வரி கழிக்கப்படுவதை நிறுத்துமாறு கோருதல்.

*பிரேரித்த சங்கம்:* வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம்

### பற்று வரியினை நீக்கக் கோருதல

வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பற்றுவரியினை கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து அறவிடுவதை நீக்குமாறு கோருதல்.

*பிரேரித்த சங்கம:* பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ. சங்கம்

### மக்கள் வங்கியடம் வட்டிக்குறைப்புச் செய்வதற்கான கோரிக்கை

கூட்டுறவுச் சங்கங்களின் நிலையான வைப்புக்களை மக்கள் வங்கியில் நடைமுறைப்படுத்துவதால் கூட்டுறவுச் சங்கங்கள் எடுக்கும் கடன்கள், மேலதிகப் பற்றுக்களிற்கு வட்டி வீதத்தைக் குறைத்தல் வேண்டும்.

*பிரேரித்த சங்கங்கள்:* உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம் வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்,பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ. சங்கம்

### வட்டியில்லாத கடன் கோரிக்கை:

கூட்டுறவுச் சங்கங்கள் இழப்புக்களின் காரணமாக தற்போது எதிர்நோக்கும் பாரிய நிதி நெருக்கடியை ஓரளவுக்கேனும் குறைத்து தனது செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் வட்டியில்லாக் கடனாக தலா 5,000,000/= வீதம் கூட்டுறவுச் சங்கங்களிற்கு நீண்டகால கடன்தர அரசைக் கோருதல்.

*பிரேரித்த சங்கங்கள்:* உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம், நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம்,பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்.

## கூட்டுறுவுத் திணைக்கள அதிகாரிகளிடம் முன்வைத்த கோரிக்கைகள்

***83 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு ஜுலை திங்கள் 30 ஆம் திகதி கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்டக் கூட்டுறவுசபைத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டில் முன்மொழியப்பட்ட பிரேரணைகளும் அவை தொடர்பாக யாழ்.அரச அதிபர், மக்கள் வங்கி உயரதிகாரிகள், கூட்டுறவுத்திணைக்கள அதிகாரிகள், தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளும் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளது.***

### செலவிற்கான அங்கீகார அதிகரிப்பு

கூட்டுறவுச் சங்கங்களினால் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் நடைமுறைச் செலவுகளுக்கான உச்ச எல்லை ரூபா 5000.00 ஐ ரூபா 50,000.00 ஆக உயர்த்தப்படவேண்டும். அதே போன்று சங்கங்களின் செயற்பாட்டை விரைவுபடுத்தக் கூடிய வகையில் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் மூலதனச் செலவுகளிற்கான கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் அங்கீகரிக்கப்படக்கூடிய உச்ச எல்லை ரூபா 50,000.00 இலிருந்து 500,000.00 ஆக உயர்த்தப்படவேண்டும்.

*பிரேரித்த சங்கங்கள்:* வலிகிழக்கு தென்பகுதி (நீர்வேலி) ப.நோ.கூ.சங்கம், நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம், புலோலி ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம், யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூ.சங்கம்.

வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைக் காலத்திற் செய்யப்பட்டது போன்று மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் யாவற்றிற்குமான படிவங்கள், புத்தகங்கள் என்பவற்றை யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை அச்சிட்டு இருப்பில் வைத்திருந்து புல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றிற்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களில் காகிதாதி இருப்புத் தொகையைப் பெருமளவில் குறைக்க முடியும். மேலும் காகிதாதிச் செலவிலும் ஒரு கணிசமான அளவைக் குறைக்க முடியும். மாவட்ட மட்டத்தில் இதற்கான பொறுப்பை மாவட்டக் கூட்டுறவுச்சபை ஏற்றுக்கொள்ளீ வேண்டும். இந்நடவடிக்கையை வினைத்திறன் மிக்கதாக முன்னெடுக்க ஆலோசனைகள் வழங்க, தேவைப்படின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட உபசபை ஒன்றினையும் அமைத்துச் செயற்படலாம்.

*பிரேரிப்பு:* யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை.

### பணிப்பாளர் சபை அமைப்பு மாற்றம்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் தற்போது 7 உறுப்பினர்களைக்கொண்டு காணப்படும் பணிப்பாளர் சபை அமைப்பை 9 உறுப்பினர்களாக அதிகரித்தலும் அதில் பணியாளர் சார்பில் ஒருவருக்கும் மகளிர் சார்பில் இருவரும் கட்டாயமாக அங்கம்வகிக்கக் கூடியதாக உப விதிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்

*பிரேரித்த சங்கங்கள்:* பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம், யாழ்.மாவட்ட மகளிர் குழு.

### தலைவர் பதவி

கூட்டுறவு சங்கங்களில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் தலைவர் பதவியினை வகிக்கக்கூடாது என்பதைச் சட்டமாக்குவதற்கு ஏற்ற நடவடிக்கையை இம் மாநாடு மேற்கொள்ளவேண்டும்.

*பிரேரித்த சங்கம்:* கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

### அங்கத்தவர் பங்களிப்பு

* கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்களின் பங்களிப்பு மிகவும் அருகி வருகின்ற நிலையே காணப்படுகின்றது. இந்நிலைமையை மாற்றி அங்கத்துவ ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான மார்க்கங்களை இம் மாநாடு இனம்கண்டு தீர்மானிக்க வேண்டுமெனவும்

* ரூபா 100 உம் அதற்கு மேலும் பங்குப் பணம் செலுத்தியவர்களை மட்டுமே அங்கத்தவர் பட்டியலில் இருந்து சேர்க்கப்படவேண்டும் என்றும் அதற்கு உட்பட்ட பங்குப்பணம் செலுத்தியவர்களை அங்கத்தவர் பட்டியலில் இருந்து நீக்கப்படவேண்டும் என்றும் இவ்வாறு தயாரிக்கப்பட்ட அங்கத்தவர் பட்டியலில் இருந்தே கிளைகளூடாக பொதுச்சபைக்கு பங்குபற்றும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை கணக்கிடப்படல் வேண்டும் என்றும் முன்மொழிகின்றோம்.

* சங்கத்திற் கடன் பெற்று உரிய தவணையில் கடனை மீளச் செலுத்த தவறும் அங்கத்தவர்கள் அனைவரையும் கடன் தவணை தப்பிய அங்கத்தவர்கள் பட்டியலிற் சேர்த்து அவர்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படல் வேண்டும் என்றும் முன்மொழிகின்றோம்.

*பிரரேரித்த சங்கம்:* ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

எந்தவொரு துறைசார்ந்த அபிவிருத்திக்கும் அத்துறைசார்ந்த கல்வி அறிவு மிகவும் அவசியமானது. எனவே, எதிர்காலத்திற் சகல பணியாளர்களுக்கும் கூட்டுறவு பயிற்சி பெறுவதோடு கூட்டுறவு பயிற்சி பெற்றவர்களையே பணிக்கு அமர்த்தப்படுவதும் கூட்டுறவுப் பயிற்சிபெற்றவர்களை ஊக்குவிப்பதற்கு சம்பள உயர்வுகளை வழங்குதல்.

*பிரேரித்த சங்கங்கள்:* நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் கட்டைவேலி நெல்லியடி, ப.நோ.கூ.சங்கம் யா.மா.கூ.சபை, யா.மா.சி.க.வ.கூ.ச.சமாசம்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவாளர் மாநாட்டில் ..........

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

*கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஆளணித்திரட்டிற் பொது முகாமையாளர் ஏனைய நடுத்தர முகாமையாளர் பதவிகளைத் தவிர்ந்த ஏனைய பதவிகள் அனைத்தின் பதவிகளையும் முகாமைத்துவ உதவியாளர் என மாற்றி அமைத்து மேற்படி பதவியிலே தரப்படுத்தி அமர்த்தல் வேண்டும்.

* தொடர்ச்சியாக ஒரு வருடத்திற்கு மேல் சங்கத்துடன் கொடுககல் வாங்கல் நடவடிக்கை கள் ஏதுமற்ற அங்கத்தவர்களை அங்கத்துவத்தில் இருந்து நீக்குவதற்கு ஏற்ற சட்ட ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

* சங்கத்தின் தலைவர், நெறியாளர் குழுத்தெரிவிற் பிரதிநிதித்துவமுறை நீக்கப்பட்டு சகல அங்கத்தவர்களுக்கும் நேரடியாக பங்குபற்றி அவர்கள் சகலரதும் பிரதிபலிப்புடன் தெரிவுகள் இடம்பெறக் கூடியதாக தற்போதய தெரிவுமுறையில் மாற்றம் செய்யப்படல் வேண்டும்.

* தங்களது பதவிக் காலத்தில் தொடர்ச்சியாக நட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களை இயக்கிய இயக்குனர்சபை உறுப்பினர்கள் அடுத்து வரும் காலப்பகுதியில் நெறியாளர் குழுவில் இடம்பெற முடியாதவகையில் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

*பிரேரணை:* யாழ்.மாவட்டக் கூட்டுறவு முகாமைத்துவ ஆலோசனைச் சபை.

### கல்வி அபிவிருத்தி கூட்டுறவுப் பயிற்சி

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் யாவரும் கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும் ஒவ்வொரு மட்டப் பணியாளர்களுக்கும் அந்தந்தத் தரத்திற்கேற்ப கூட்டுறவுப் பயிற்சி இருத்தல் வேண்டும். இனிமேல் கூட்டுறவு நிறுவனங்களில் பணியாளர்களைச் சேர்க்கும் போது இவ்விடயம் கவனத்தில் கொள்ளவேண்டும் என கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவைக் கோருகின்றோம்.

தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ள பணியாளர்கள் கூட்டுறவுப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள சம்பளஉயர்வு, ஊக்குவிப்பு வழங்கப்படவேண்டும்.

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளர் சம்பளம் உட்படச் சகல செலவுகளுககும் கூட்டுறவு நிதியில் இருந்து நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் ஒருங்கிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கும் கூட்டுறவு நிதியில் இருந்து நிதி வழங்கவேண்டுமெனவும் கோருகின்றோம்.

*பிரேரித்தது:* யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை.

### கூட்டுறவு மகளிர் அபிவிருத்திச் செயற்பாடுகள்

கூட்டுறவு மகளிர் கல்வித்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதறகு மிகக் குறைந்த எண்ணிக்கையிலான சங்கங்களே ஆதரவு வழங்கி வருகின்றது. இந்நிலமையை மாற்றி அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் தமது ஆதரவை வழங்க முன்வரவேண்டுமென கோருகின்றோம்.

சகல கூட்டுறவுச் சங்கங்களிலும் கிளைமட்ட, சங்க மட்ட மகளிர் குழுக்களை அமைத்து அவை தொடர்ந்து செயற்படுவதனூடாக கூட்டுறவின்பால் மகளிர் அங்கத்துவ அதிகரிப்பு, தலைமைத்துவ அதிகரிப்பு என்பன உயர்வடைய தேவையான ஒத்துழைப்பை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்க வேண்டுமென கோருகின்றோம்.

கிளை அமைப்புக்களை கொண்டு இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களினதும் கிளைக் குழுவில் குறைந்தது இரண்டு மகளிர்களும், அதே போன்று பணிப்பாளர் சபைகளில் குறைந்தது இரண்டு மகளிர்களும் கட்டாயமாக இருக்கவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த பொருத்தமான சுற்றறிக்கை ஒன்றை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வழங்கி உதவ வேண்டும். அத்துடன் இச்சுற்றறிக்கை சங்கங்களால் நடைமுறைப்படுத்தப்படுவதை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உறுதிப்படுத்தி தனது ஒத்துழைப்பை இது தொடர்பில் முழுமையாக வழங்கி உதவ வேண்டும் எனவும் கோருகின்றோம்.

பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் போர்க்கால சூழலில் பாரிய சொத்து இழப்புக்களை சந்தித்து தற்போது நிதி நெருக்கடிக்குள் செயலாற்றி வருவதும் யாம் அறிந்ததே. இந்நிலையில் கூட்டுறவு மகளிர் அபிவிருத்தி செயல்பாடுகளுக்கு போதுமான நிதியிடலை மேற்கொள்ள முடியாத நிலையில் சங்கங்கள் இருபபதும் உண்மையே. எனினும் கூட்டுறவு இயக்கத்தின் எதிர்கால நிலைத்த அபிவிருத்தி நோக்கில் அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு மகளிர் கல்வித்திட்டம் முக்கிய பங்கு வகிக்க முடியும் என்பதால், இதனை விரிவுபடுத்துவதற்கு அல்லது பலப்படுத்துவதற்கு வேண்டிய நிதி உதவியை சிறிது காலத்திற்கேனும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூட்டுறவு நிதியில் இருந்தோ அன்றி ஏனைய நிதி வழங்கும் நிறுவனங்களிடம் இருந்தோ பெற்றுத்தர வேண்டுமென கோருகின்றோம்.

போர் அனர்த்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள் கட்டுமானப் பணிகளுக்கென எமது பிரதேசத்திற்கு வந்து, வருகின்ற நிதி வழங்கும் நிறுவனங்கள் மகளிர் அபிவிருத்திக்கு முக்கிய இடம்கொடுத்து வருகின்றது. அத்தகைய நிறுவனங்கள் மகளிர் அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தவும், அத்திட்டங்களைத் தொடர்ந்து மேற்பார்வை செய்து நடைமுறைப படுத்தக் கூடியதுமான நிறுவனங்களாக இருந்தபோதும் அவர்களால் பின்வரும் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களில் பெண் அங்கத்தவர்கள் மிகக் குறைவாகவே காணப்படுதல். அதனை அதிகரிக்கப் போதுமான நடவடிக்கை இல்லாமை.

கூட்டுறவு நிறுவனங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரமுடைய பணிப்பாளர் சபை போன்ற அமைப்புக்களில் பெண்களிற்கு போதிய இடமின்மை.

மகளிர் அபிவிருத்தியில் கூட்டுறவு நிறுவனங்கள் போதிய அக்கறை இன்மை. மக்களது அடிமட்ட அமைப்பாகவும், ஜனநாயக கட்டுப்பாடான அமைப்பாகவும் கூட்டுறவு அமைப்பு இருந்தபோதும் போதிய ஆண், பெண் சமத்துவம் இன்மை.

இக்குறைபாடுகளை நீக்குவதன் மூலமே பாதிக்கப்பட்ட எமது பிரதேச பெண்களினதும், வறுமையில் வாழும் பெண்களினதும் மேம்பாட்டிற்கான பணியில் ஈடுபடும் அல்லது நிதி வழங்கும் நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று சேவை செய்ய முடியும். இதன் மூலம் காலத்தின் கட்டாய பணியில் கூட்டுறவு நிறுவனம் பங்கேற்கவும், மக்கள் மத்தியில் கூட்டுறவு தொடர்பான நன்மதிப்பை மேம்படுத்தவும் முடியும். எனவே இக்குறைபாடுகளை விரைவாக குறைப்பதற்கு அல்லது நீக்குவதற்கு பொருத்தமான தீர்மானத்தை இம்மாநாடு மேற்கொள்ளக் கோருகின்றோம்.

பிரேரித்தது : மாவட்ட மகளிர் குழு - யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை.

### மதுபான (சாராயம் விற்பனை) அனுமதிப்பத்திரம் வழங்கல்

திக்கம் வடிசாலை, வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி வடிசாலை, தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாராயத்திற்கு தேவையான மூலப்பொருளான பனங்கள்ளினைப் ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் கடனுக்கு வழங்கி வருகின்றன. சாராய விற்பனை போதியளவு இல்லாமையால் எமக்கு வருமதியான பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது. சாராய உற்பத்திக்குத் தேவையான கள்ளினை நாங்கள் வழங்கி வருகின்றபோதும் உற்பத்தி செய்யப்படும் சாராயத்தை விற்பனை செய்யமுடியாமல் உள்ளது. எனவே எமது உற்பத்தியை நாமே விற்பனை செய்வதன் மூலம் விற்பனையை மேம்படுத்தி எமக்கு வருமதியான பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ப.தெ.வ.அ.கூ சங்கங்களுக்குச் சாராய விற்பனை அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

*பிரேரித்த சங்கம்:* சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

### பனைவள உற்பத்தியினை மேம்படுத்தல்

எமது பிரதேசத்தின் முக்கியமான உள்ளூர் வளமாகக் காணப்படும் பனை, தென்னை மரங்களில் இருந்து பெறப்படும் கள் உற்பத்தியைச் சந்தை வாய்ப்புக்கு ஏற்ற வகையிலும் அது சார்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் இலாபகரமாக இயங்கவும், எல்லாவற்றுக்கும் மேலாக துறை சார்ந்த தொழில் வல்லுனர்களாக அச்சங்க அங்கத்தவர்களின் வருமானத்தை அதிகரித்து வழங்கவும், அவர்களது குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பின்வரும் விடயங்களை மேற்கொள்ள தொடர்புடைய அனைவரும் உரிய பங்களிப்பை வழங்க கோருகின்றோம்.

*ஒவ்வொரு சங்கங்களுக்கும் பனம் சாராயத்தை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை வழங்குதல்.

*யாழ்.மாவட்டத்திலுள்ள மதுபான விற்பனை நிலையங்கள் யாவும் எமது வடிசாலையில் சாராயத்தை நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கல்.

*பிற மாவட்டத்திலிருந்து சாராயம் எமது பிரதேசத்திற்கு கொண்டுவருவதை தடைசெய்தல்.

* நவீன முறையில் கள்ளை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கான நிதி உதவியை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுத் தருதல். இதற்கு சுமார் 15 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட் டுள்ளது.

*பிரேரித்த சங்கங்கள்:* வலிகாமம் ப.தெ.வ.கூ.ச. கொத்தணி, ஊர்காவற்றுறை ப.தெ.வ. அ.கூ. சங்கம், கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

### வரிச்சலுகை வழங்கக் கோருதல்

கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யக்கூடிய அனைத்துப் பொருள்களையும் கொழும்பில் இருந்து கொண்டு வருவதற்கான அனுமதியினை உரியவர்களிடம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கோருகின்றோம். கொழும்பிலிருந்து கொண்டுவரும் பொருள்களுக்கு வரிச்சலுகையினை ஆயப்பகுதியிடம் கோரி பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

*பிரேரித்த சங்கம்:* உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்.

---

# யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்பீடுகளை பெற்றுத்தர முயற்சிப்பேன்



**ஒப்பந்த வேலைகளை சங்கங்களே செய்யவேண்டும்**

"யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள் காரணமாக இங்குள்ள கூட்டுறவுச் சங்கங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுப் பல கோடிக்கணக்கான ரூபாய்களை இழந்துள்ளன என்பதை நான் நன்கு அறிவேன். எனக்குக் கிடைக்கப்பெற்ற புள்ளி விபரங்களின் அடிப்படையில் சுமார் 35 கூட்டுறவுச் சங்கங்களின் இழப்பீடு, சுமார் 586 மில்லியன் ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தருவதற்கு என்னால் முடிந்தவரை முழு முயற்சி களையும் எடுப்பேன்" என்று யாழ். அரச அதிபர் திரு.க.கணேஷ் அவர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் யூலை மாதம் 30ம் திகதி கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு.பெ. கனகசபாபதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டிலேயே யாழ். அரச அதிபர் திரு. க. கணேஷ் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு மாநாடு ஆரம்பமாவதற்கு முன் வீரமாகாளி அமமன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நல்லூர் கிளை விற்பனை நிலையம் முன்பாக காலை 9.00 மணிக்கு அங்கத்தவர்கள, பணியாளர்கள் கூட்டுறவுக் கொடிகளுடன் கூட்டுறவுச் செய்தி ஒன்றினைத் தாங்கிய வண்ணம் மரதன் ஓட்ட அணியாக கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்து கூட்டுறவுச் செய்தி அடங்கிய பேழையை கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.பெ. கனகசபாபதி அவர்களிடமும் கூட்டுறவுப் பகுதிப் பொறுப்பாளர் திரு. பொ.புஸ்பகுமார் அவர்களிடமும் கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் ஆராயப்பட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தீர்மானங்கள் தொடர்பாகத் தொடர்ந்து உரை நிகழ்த்திய யாழ். அரச அதிபர் திரு.க. கணேஷ் கூறியதாவது,

கூட்டுறவுப் பணி ஒரு சாதாரண பணியல்ல. மிகவும் கஷ்டமான பணி என்பதை நான் நன்கறிவேன். எனது பதவிக் காலங்களிற் கூட்டுறவு இயக்கத்தோடும், கூட்டுறவாளர்களுடனும், பணியாளர்களுடனும், திணைக்களத்தோடும் நீண்ட காலமாக நெருக்கமான தொடர்பு இருந்து வந்துள்ளது. யுத்த காலங்களிற் கூட்டுறவாளர்களின் கஷ்டமான பணியைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டவன் என்ற வகையில் உங்களது நஷ்டஈட்டுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுத்தாருங்கள் என்ற கோரிக்கையை நான் ஏற்றுக் கொள்கிறேன். இக்கோரிக்கையை நீங்கள் விடுக்க வேண்டிய அவசியமில்லை. இந்த நஷ்டஈடு நிச்சயமாகக் கொடுபட வேண்டியதொன்றாகும். இந்நிலையில்தான் யாழ். மாவட்ட அரச அதிபராகப் பதவி ஏற்றபின் இதற்கான புள்ளி விபரங்களைத் திரட்டியுள்ளேன்.

ஆனால், இன்றைய கால கட்டத்தில் இத்தகைய நஷ்டஈடுகளைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் எந்த அமைச்சினாலும் செய்யப்படவில்லை. எனினும் நாம் எதனையும் செய்யாது பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நாம் எதனையாவது செய்ய வேண்டிய நிலையிலேயே உள்ளோம்.

நீர்ப் என்னும் கட்டமைப்பு உலகவங்கியின் உதவியோடு இணைத்து உலகவங்கித் திட்டத்தின் கீழ் இனிவரும் காலங்களில் உளளூராட்சி, கூட்டுறவு ஆகிய இரண்டு முக்கியமான துறைகளுக்கு உதவ முன்வந்துள்ளது. இந்நிலையில் உங்கள் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் நிச்சயமாக மேற்கொள்ளுவோம். உங்களது நஷ்டஈட்டுக் கோரிக்கைகளை ஆராய்ந்து அதற்கான சிபார்சுகளை முன்வைக்க வேணடியது கூட்டுறவுத் திணைக்களத்தின் பொறுப்பாகும். இவ்விடயத்தில் அவர்கள் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும்.

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுப் பல இழப்பீடுகளைச் சந்தித்த சங்கங்கள், தங்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வட்டி இல்லாக் கடனாக 50 லட்சம் ரூபா வழங்குவதற்குத் திறைசேரி கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளபோதும், வட்டி இல்லாக் கடன் கோரிக்கைகளைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஊடாகக் கூட்டுறவு அமைச்சுக்கு விடுக்குமாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனவே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கட்டிட ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்கள் அஞ்சத் தேவையில்லை. ஒப்பந்த வேலைகளைச் செய்யக் கூடிய ஆற்றல், நிதி வலு, அனுபவம், மனித வலு என்பன உண்டு. இதனைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உறுதிப்படுத்தித் திருப்திப்படுபவராக இருந்து சிபார்சு செய்தால் அவ் ஒப்பந்த வேலைகளை நாம் கூட்டுறவுச் சங்கங்களுக்குக கொடுக்கத் தயாராக உள்ளோம். ஆனால் அவர்கள் இவ் ஒப்பந்த வேலைகளை எந்தக் கட்டத்திலும் உப ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கக் கூடாது. சங்கங்களே அவ் ஒப்பந்தவேலைகளை உரிய காலத்தில் செய்து முடித்து அதனால் கிடைக்கும் அனைத்து முழு இலாபத்தையும் சங்க அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும். இந்நிலையில் ஒப்பந்த வேலைகளுக்குரிய அனுமதியை உங்களுக்கு வழங்க ஆயத்தமாக உள்ளேன்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உலக வங்கித் திட்டத்தின் கீழ் ஆயிரம் வீடுகள் அமைக்கும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வீடுகள் கிராமப்புறங்களில் அமைக்கப்படுவதால் இவற்றுக்குரிய உபகரணங்களைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்குவது சுலபமாகவும், சிறந்ததாகவும் இருக்குமென அதற்குரிய முற்பணத்தையும் அவர்களுக்கு வழங்குமாறும் வடகிழக்குமாகாண தலைமைச் செயலாளருக்கு ஆலோசனை கூறியுள்ளேன். இதனை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்கள் வழங்கும் முற்பணத்தை வியாபார அபிவிருத்திக்குப் பயன்படுத்தி வருமானத்தை அதிகரித்துக்கொள்ளச் சங்கங்கள் முன்வர வேண்டும்.

ஆழிப்பேரலையினாற் பாதிக்கப்பட்ட இரண்டு சங்கங்களின் கட்டிடங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள் உட்பட முற்றுமுழுதாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளமையால் வடமராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (மருதங்கேணி) பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் கிளை விற்பனை

(8ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவு நிறுவனங்கள் மக்கள் வங்கியுடன் தெளிவான உறவை வைத்திருத்தல் வேண்டும்



வட பிராந்திய மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் திரு. எம்.கே.சிவபாதவிருதையர் பேசுகையில் கூறியதாவது,

நாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது கூட்டுறவு நிறுவனங்கள் மக்களுக்குச் செய்த சேவைகளை சகலரும் எளிதில் மறந்துவிடமுடியாது. இது நாடறிந்த உண்மையான விடயமாகும். யுத்த காலத்தில் அரசாங்கம் கூட கூட்டுறவாளர்களை நம்பித்தான் தன்னுடைய அரச பரிபாலனத்தை மேற்கொண்டு வந்தது. அத்தகைய சேவையாற்றிய நீங்கள் உங்கள் குறைகளைப்போக்குமாறு அரசாங்கத்தையோ, நிதி நிறுவனங்களையோ கேட்பதற்கு உரிமையுடன் கூடிய தகுதி உங்களுக்குண்டு. எனவே சங்கங்கள் தேவைகளை, குறைகளை எமக்கு கோரிக்கைகளாக முன்வையுங்கள். அது தொடர்பில் எங்களால் ஆன உதவிகளை நாம் செய்வோம். அப்போதுதான் உங்களுக்கும் எங்களுக்குமிடையிலான தொடர்பு சுமூகமான முறையில் வலுவுள்ளதாக இருக்கும்.

பிடித்து வைத்தல் வரியைக் கழிப்பது தொடர்பாக நீங்கள் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பாக நாம் ஏற்கனவே கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருடன் தொடர்பு கொண்டபோது அவர் நட்டத்தில் இயங்கும் சங்கங்களின் பட்டியல் ஒன்றைத் தந்துள்ளார். பிடித்து வைதல் வரியை கழித்தெழுவது தொடர்பாக நீங்கள் முன்வைக்கும் கோரிக்கையை மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பி வைப்பதுடன், உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

எனவே இக்கோரிக்கையை அரச அதிபர் மூலமாகவும், மக்கள் வங்கியில் உள்ள உங்கள் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி மூலமாகவும் நீங்கள் முன்வைத்தால் இக்கோரிக்கைக்கு மேலும் வலுவூட்டுவதாக அமையும்.

### பற்றுவரியை நீக்கக் கோருதல்:

பற்றுவரியை நீக்குவது சம்பந்தமாக மத்திய வங்கிச் சுற்று நிருபம் ஒன்றை, மக்கள் வங்கி தனது சகல கிளைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது. அச்சுற்று நிருபத்தில் சகல வங்கிகளும் இப்பற்றுவரியைக் கழித்து அனுப்பவேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே இவ்வரி சட்டப்படி கழிக்கப்படவேண்டும். இதிலிருந்து நாம் விதிவிலக்குப் பெறவேண்டுமானால் அதற்கு நாம் விண்ணப்பிக்க வேண்டும். உங்களின் கோரிக்கையை நாம் மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்புகின்றோம். நீங்களும் அரச அதிபர் ஊடாகவும், மக்கள் வங்கியில் உள்ள கூட்டுறவுச் சங்கப் பிரதி நிதியூடாகவும் இக்கோரிக்கையை மக்கள் வங்கியிடம் முன்வைக்க வேண்டும். ஏற்கனவே எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக மக்கள் வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் மட்டத்திலும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலை, அவற்றிற்கு ஏற்பட்ட நட்டங்கள் தொடர்பான விபரங்களைச் சேகரித்து மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்விபரங்கள் யாவும் விரைவில் அனுப்பி வைக்கப்படும். பிடித்து வைத்தல் வரியை நீக்கக் கோரும கோரிக்கை பெரும்பாலும் சரிவரும் எனக்கருதுகிறேன். கூட்டுறவு நிறுவனங்கள் மக்கள் வங்கியோடு வைத்திருக்கும் உறவு தெளிவாக இருக்கும்போதுதான் நாம் மக்கள் வங்கியின் முகாமைத்துவத்தைக் கோரமுடியும். பற்றுவரியைப் பொறுத்தவரையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பற்றுவரி இல்லை என்று அரசாங்கம் முன்னர் கூறியிருந்தது. ஆனால் தற்போது அப்படி இல்லை. எனவே இதற்கு நீங்கள் கோரிக்கை ஒன்றை முன்வைக்க வேண்டும்.

### வட்டிக் குறைப்பு

மக்கள் வங்கிசங்கங்களுக்கு வட்டிக் குறைப்புச்செய்ய வேண்டுமென்ற உங்கள் கோரிக்கையைப் பொறுத்தளவில் ஏற்கனவே மக்கள் வங்கி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனியாரைவிட வட்டி குறைத்துத்தான் வழங்கி வருகின்ற அது மேலும் குறைக்கப்படவேண்டுமாயின் வட்டிக் குறைப்புக்கோரிக்கையை நீங்கள் முன்வைக்கவேண்டும். அடுத்து வட்டி இல்லாக் கடனாக 50 லட்சம் ரூபாவை மக்கள் வங்கி மூலமாகப் பெறுவதற்கு அரசாங்கத்தைக் கோர வேண்டுமென்ற உங்களின் கோரிக்கை முன்மொழிவு சரியானதே. இக்கடனை நீண்ட காலக்கடனாகவும் நீங்கள் கோரலாம்.

மக்கள் வங்கியைப் பொறுத்தவரையில், எந்தவொரு பிறவங்கிகளாலும் வழங்கப்படாத கூடிய வட்டியையே மக்கள் வங்கி கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்குகிறது. இருந்தாலும், கூட்டுறவுச் சங்கங்கள் தனிப்பட்ட முறையிலும் கூட வைப்புக்களுக்கான வட்டி வீதத்தை அதிகரித்து வழங்கும்படியும் மக்கள் வங்கியைக் கோரலாம் என்று அவர் கூறினார்.

# கூட்டுறவுச்சட்டங்களை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்

கூட்டுறவுத் திணைக்களத்துடன் தொடர்பான சங்கங்களின் முன்மொழிவுகளுக்குக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செ.கனகசபாபதி விளக்கமளித்துக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது.

கூட்டுறவுச் சங்கங்களினால் முன்மொழியப்பட்ட செலவிற்கான அங்கீகார அதிகரிப்பு என்னும் விடயத்தில் இரண்டு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒன்று நடைமுறைச் செலவு மற்றது மூலதனச் செலவு.

1992ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தை நாம் நன்கு விளங்கிக்கொண்டால் எங்களுக்கு எந்தவிதமான பிரச்சனைகளும் இல்லாமல் போகும். நடைமுறைச் செலவுகளைப் பொறுத்த மட்டில் அதற்கு எவ்வளவு என்ற உச்ச எல்லை எந்த இடத்திலும் விதிக்கப்படவில்லை. நாங்கள் ஏதோவொரு பாரம்பரியமான பழக்கதோஷத்தினால் இதனை யோசித்துக்கொண்டிருக்கிறோம். நடைமுறைச் செலவுகளுக்கு எந்த வரையறையும் (லிமிற்) இல்லாதபடியால் எவ்வளவு பணமும் நீங்கள் செலவு செய்யலாம். இதுதான் உண்மை. இதனை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அடுத்து மூலதனச் செலவு என்ற விடயததில் இதற்கான மட்டுப்பாடு "விதி" என்று சொல்லப்படுகின்ற ஆவணத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விதியானது அமைச்சரால் ஆக்கப்பட்டுப் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டு, வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட ஒரு ஆவணமாகும். யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களின் வேண்டுகோளின் பேரில் எங்களுடைய ஆணையாளர் 2003ம் ஆண்டு சுற்றுநிருபத்தின் மூலம் தளர்ச்சியை ஏற்படுத்தினார். இதன் மூலம் அமைச்சரினால் ஆக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட "விதி" யை ஆணையாளர் சுற்றுநிருபம் மூலம் மாற்ற முடியாது என்று சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து ஆணையாளர் அச்சுற்றுநிருபத்தை மீளப்பெற்றுக்கொண்டார். இந்நிலையில் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இதில் எமகது உதவக் கூடியவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களே. இது வடக்குக் கிழக்கிற்கு என்று இல்லை. ஏனைய மாகாணங்களுக்கும் பொருத்தமாக இருப்பதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு போனால் இதனை இலகுவாகத் தீர்க்கலாம்.

ஆனாலும் எங்களுடைய தேவைகள், பிரதேசத்தின் நிலைமை என்பவற்றை அனுசரித்து சில தந்திரோபாயங்களை புகுத்தி, அன்பளிப்புப் பெற்றுச் செய்யப்படுகின்ற மூலதனச்செலவாக இருந்தால் அனுமதி தேவை இல்லை என்று சொல்லி இருக்கின்றோம்: அப்படி இல்லை, அனுமதி தேவை என்று கேட்டவர்களுக்கு அனுமதி கொடுத்துள்ளோன். அன்பளிப்புக்கள், நன்கொடைகள் பெறப்பட்டுச் செய்யப்படுகின்ற வேலைகளுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் பொருந்த மாட்டாது.



இன்னும் சில சந்தப்பங்களில் உங்களது ஒத்துழைப்புடன் பல சங்கங்களுக்குச் செலவுகளை இரண்டு மூன்றாகப் பிரித்துச் செலவு வரையறைக்கு உட்படுத்தி அனுமதி கொடுத்திருக்கிறோம். வருங்காலத்திலும் அனுமதி கொடுப்போம். விதியில் சொல்லப்பட்டவாறு மூலதன முடக்கம் இல்லாது இருக்கவே இதனை நாம் செய்து வருகிறோம்.

1992ம் ஆண்டு சட்டத்தில் மூலதனச் செலவுகளுக்கு பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர் சபை மேற்கொள்ளலாம். ஆனால் எமது அங்கீகாரம் பற்றி எதுவும் அங்கு பேசப்படவில்லை. 1972ம் ஆண்டுச் சட்டத்தில் அது நீக்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் என்னவெனில் அங்கீகாரம் தேவையில்லை என்பதாகும். பொதுச்சபை எங்களுடைய எசமானர்களாக இருப்பதால் அவர்களுடைய அங்கீகாரம் கட்டாயம் தேவை. இதுதான் உண்மை நிலை. எனவே 1972ல் ஆக்கப்பட்ட விதி, சட்டம் என்பவற்றை கவனிக்காது அதன் பிறகு 1992ல் ஆக்கப்பட்ட சட்டத்தையே நாம் கவனிக்க வேண்டும். பழைய சட்டத்தில் நாம் மயங்கிப்போய் உள்ளோம். இந்த மயக்கநிலையில் இருந்து நீங்குவதற்கு கூட்டுறவாளர்களும், திணைக்களமும் சேர்ந்து போராட வேண்டும்.

### பணிப்பாளர்சபை அமைப்பு மாற்றம

பணிப்பாளர் சபை அமைப்பு மாற்றம் பற்றி இங்கு கேட்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக யாப்பு என்ன சொல்கிறது. இது யாருடைய யாப்பு? கூட்டுறவுச் சங்கத்தின் யாப்பு. கூட்டுறவாளர்களினால் ஆக்கப்பட்ட யாப்பு. இந்த யாப்பில் வேறு யாரும் தலையிட முடியாது. யாப்பை உருவாக்குவதற்கான சுதந்திரம் எமக்குண்டு. எனினும் பிறிதொரு கட்டுப்பாடும் உண்டு. சட்டத்தை மீறி ஒரு யாப்பு இருக்கக் கூடாது. எனவே நீங்கள் தாராளமாகப் பணிப்பாளர்சபை அங்கத்தவர்களை மாற்றி அமைக்கவோ, இதில் மகளிர்களைச் சேர்த்துக் கொள்வதற்கோ உங்களுக்கு முடியும். இதில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். 1987ம் ஆண்டு நாடுதழுவிய ரீதியில் "வெள்ளை உபவிதி" ஒன்று எங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் இந்த ஏற்பாடுகள் எல்லாம் இருக்கிறது. மகளிரைப் பணிப்பாளர் சபையில் சேர்த்துக்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# முகாமையில் உள்ளவர்கள் மூலதனம் முடங்காதவாறு திட்டமிட்டு செயற்படவேண்டும்

மக்களுக்காக, மக்களால், செய்யப்படக்கூடிய ஒரு சேவை என்ற அடிப்படையில் கூட்டுறவை நாம் பார்க்கிறோம். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தளவில் கூட்டுறவில் மிக, மிக முன்னணியில் இருந்த ஒரு பிரதேசமாகும். கூட்டுறவில் இங்கு பல்வேறு சங்கங்கள் பரந்த அளவில் உருவாகியுள்ளன. இவற்றினூடாக பல்வேறுபட்ட சேவைகள் கிடைக்குமென மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

கூட்டுறவுத்துறை பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ளபோதும் இவற்றில் இருந்து விடுபட்டு கூட்டுறவுத்துறை எவ்வாறு தலைநிமிர்ந்து நிற்கப்போகிறது? மக்களுக்கு எத்தகைய சேவைகளை ஆற்றப் போகிறது? இன்றைய சூழ்நிலையில் அது மக்களுக்குத் தேவைதானா? திறந்த பொருளாதாரப் போட்டிச் சந்தையில் எவ்வாறு போட்டி போட்டு நிலைத்து நிற்கப்போகிறது என்ற பல கேள்விகள் எழுகின்றது.

மக்கள் தமக்குத் தேவையான பொருட்களை லாபகரமாகவும், தரமானதாகவும் வாங்கலாம் என்ற ஒரு எண்ணத்திலேயே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை நாடிப்போகிறார்கள். இல்லாவிட்டால் தனியார் கடைகளிலும் போய்வாங்கலாம். வாங்கக்கூடாது என்றும் இல்லை. ஆனால் நாம் ஒன்றை மட்டும் உணரவேண்டும். நாம் இப்போது போராட்ட காலத்தில் இருக்கிறோம். அரசியல் தீர்வு ஒன்றை எதிர்நோக்கி இருக்கிறோம்.

இன்றைய சூழ்நிலையில், ஏ 9 பாதையால் வந்த அகதிகள், இந்தியாவில் இருந்து வரக்கூடிய அகதிகள், இங்கு இடம்பெயர்ந்திருக்கக் கூடிய அகதிகள். இவர்கள் எல்லோரது மறுவாழ்வு புனருத்தாரணம் சம்பந்தமாக யாழ். செயலகத்தில் பலமாநாடுகள் நடைபெறுகின்றன. உலக வங்கியின் வீட்டுத்திட்டம், சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுத்திட்டம் ஆகிய பல திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

இதனடிப்படையில் ஒரு மலசலகூடம் அமைப்பதற்கு ஆகக்கூடிய தொகையாக 6 ஆயிரம் ரூபா கொடுக்கிறார்கள். இத்தொகையைக் கொண்டு எதனையும் செய்யமுடியாது. இங்கு முன்னர் கூறப்பட்டது போல் இத்தகய வேலைகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாகச் செய்யலாம். ஏ 9 பாதை திறக்கப்பட்டபின் மீள்குடியமர்விற்கு 25 ஆயிரம் ரூபா கொடுக்கப்பட்டது. அதற்குமுன் வந்தவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா கொடுக்கப்பட்டது. கட்டுமானப் பொருட்களை கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்வதற்கு அப்பொருட்களுக்கான சலுகைகளை அவர்களுக்கு அளித்தால் மக்கள் மீளக்குடியேறுவது ஓரளவுக்கு சுலபமாக இருக்கலாம்.

இந்நிலையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிலவசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்க அதிபர் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார். இதனால் கூட்டுறவுத்துறை முன்னேறுவதுடன், குறைந்தபட்சம் கிடைக்கக்கூடிய அந்த வருமானத்தை வைத்தும் மக்களும் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அவர்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கிய வண்ண முள்ளார்கள். திக்கத்தில் உள்ள வடிசாலையை நாம் மீண்டும் இயங்க வைக்க வேண்டுமென்றால் நான் அறிந்த வரையில் அவர்கள் வைத்திருக்கின்ற சுமார் ஆறு கோடி ரூபா பெறுமதியான எரிசாரயத்தை வைத்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கமோ அவர்கள் விற்பனைசெய்யும் வகையில் சாராயத்தை விற்பதற்கு எந்தவிதமான அனுமதிப்பத்திரமோ வழங்கவில்லை.

இந்நிலையில் நானும் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கி. சிவனேசனும் நிதி அமைச்சரை சந்தித்து அனுமதிப் பத்திரம் பெறுவது தொடர்பாக முயற்சி செய்தபோது அவர்கள் அனுமதி தர மறுத்துவிட்டார்கள். தென் பகுதியில் இருந்து குடாநாட்டுக்கு வரும் சாராயத்தை முழுமையாக நிறுத்தாமல் குறைந்த பட்சம் அதனை வரையறை செய்து அதனை ஒரு மட்டத்தில் வைத்துக்கொண்டு இங்கு இருக்கக் கூடிய ஏனைய சாராயத்தையும் விற்பதற்கு ஏற்பாடுகளை அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும். அங்கிருந்து கொண்டுவரும் சர்ராயத்துடன் இங்குள்ள சாராயத்தில் 50 போத்தல்களை யாவது விற்பனை செய்யவேண்டும் என்ற ஏற்பாட்டைச்செய்து கொடுத்து இப்பிரச்சினைக்கு ஓரளவுக் காவுதல் தீர்வு காண முயற்சிக்கவேண்டும்.

அரசாங்க அதிபரோ, அல்லது பாராளுமன்ற உறுப்பினர் களோ, கொழும்பு சென்று உடனடியாக அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுத் தரலாம் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சாராயம் விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் இன்மையால் அவர்கள் பெருந்தொகையான கள்ளினை வீணே ஊற்றுவதாக அறிகிறேன். இதற்கு நாம் எவ்வகையிலும் தீர்வு காண வேண்டுமென்று கருது கிறேன்.



யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் பசும் பாலினை பைக்கற்செய்து மக்களுக்கு விநியோகம் செய்வதற்கான தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் அரசாங்க அதிபர் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் அது இன்னமும் நடைமுறைக்குவரவில்லை. ஏனெனில் அதனை முழுமையாக செய்து முடிப்பதற்கு - தண்ணீரைச் சுத்தம் செய்வதற்கு - இன்னமும் 15 லட்சம் ரூபா தேவையாக உள்ளது என்ற நிலையில் ஏற்கனவே முதலீடு செய்யப்பட்ட

(9 ஆம் பக்கம் பார்க்க)

# உங்கள் கோரிக்கைகள் தலைமைப் பீடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்



தமிழீழ நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர் திரு. இளஞ்சேரன் பேசுகையில் கூறியதாவது,

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவாளர்களும், கூட்டுறவு நிறுவனங்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆற்றிய பங்களிப்பை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. அதனால் அவர்கள் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களையும், நிதியையும் இழந்துள்ளனர். அன்று போருக்கு முகம்கொடுத்து பல நெருக்கடிகளை சந்தித்தவர்கள் இன்று சமாதான காலத்தில் திறந்த பொருளாதாரத்தில் தனியார் வர்த்தகர்களின் போட்டி வர்த்தகத்திற்கு முகம் கொடுக்க வேணடியவர்களாக உள்ளார்கள்.

இந்நிலையில் கூட்டுறவாளர்கள் நடத்துகின்ற இம்மாநாட்டில் இரண்டு மூன்று முன்மொழிவுகளுக்கு நாம் பதில் கூறவேண்டியுள்ள நிலையில் உள்ளோம்.

1.கூட்டுறவுச் சங்கங்களுக்கான வரிச்செலுத்துகை.

2.சாராய விற்பனைக்குரிய அனுமதியும், பிற மாவட்டத்தில் இருந்து சாராயம் எமது பிரதேசத்திற்கு கொண்டு வருவதைத் தடை செய்தலும்.

**வரிச்சலுகை**

கூட்டுறவு நிறுவனங்களுக்கான வரிச்சலுகையை பொறுத்தவரையில், சமாதான ஒப்பந்தத்தின் பின் நாங்கள் சில நடைமுறைகட்டுமான வேலைகளைச் செய்வதற்காக எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் "ஆயம்" என்ற பகுதியை செயல்படுத்தி வருகிறோம். மிகவும் வேகமான செயற்பாட்டின் மூலம் வியாபாரத்தை நடத்துவதையே நாம் விரும்புகிறோம்.

கூட்டுறவு நிறுவனங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள், இழப்புக்களை தனியார் நிறுவனங்களும் சந்தித்துள்ளன. இந்நிலையில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வரிச்சலுகை வழங்கினால் எல்லோருக்கும் வரிச்சலுகை வழங்க வேண்டி ஏற்படும். எனவே இந்த இடத்தில் உங்களுக்கு வரிச்சலுகை பெற்றுத்தருவேன் என்ற பொய்யான வாக்குறுதியை நான் தர விரும்பவில்லை. எனினும் மனத்திருப்திக்காக தீர்மானத்தை தாருங்கள் அதனை நிதித்துறையினரிடம் சமர்ப்பிக்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்கள் தமது நிதியை கொழும்பில் உள்ள வங்கிகளில் வைப்புச் செய்துவிட்டு, வட்டியும் இல்லை முதலும் இல்லாத ஒரு நிலையில் உள்ளார்கள். ஆனால், வியாபாரத்தை செய்யவேண்டுமென் பதற்காக வங்கியில் மேலதிகப்பற்றோ, வட்டிக்கு பணம் எடுத்தோ தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

பொது முகாமையாளர்களை மாற்றுவது தொடர்பாக இங்கு பிரஸ்தாபித்தார்கள். இது சம்பந்தமான பிரேரணையும் வந்துள்ளது. சில சங்கங்கள் பொது முகாமையாளரை மாற்ற வேண்டும் என்றும், சங்க வளர்ச்சிக்கு கூடுதல் பங்களிப்பு வழங்கும் பொது முகாமை யாளர்களை மாற்ற முடியாது என்றும், ஒத்துழைப்பு வழங்காத பொதுமுகாமையாளர்களை மாற்றவேண்டும் என்றும் கேட்டுள்ளார்கள். ஒன்றை மாற்றினால் இன்னு மொன்றை விட்டுக்கொடுக்க வேண்டி வரும். இவற்றை நீங்கள் கவனத்தில் எடுத்து நடைமுறை யில் சில மாற்றங்களை மேற் கொள்ள வேண்டும்.

சாராய விற்பனைக்கான அனுமதியைப் பெற்றுத்தருமாறு கோரியுள்ளீர்கள். இதனைப் பொறுத்தளவில், இத்தகைய அனுமதி சிவில் நிர்வாகச் சட்டத்தைப் பொறுத்த விடயம். எனவே, இதற்குரிய அனுமதிகளை அரசாங்க அதிபரோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களோ தான் பெற்றுத் தர வேண்டும்.

அடுத்து பிற மாவட்டத்தில் இருந்து சாராயத்தை இறக்குமதி செய்வதை நிறுத்துவது தொடர்பாக கோரிக்கைவிட்டுள்ளார்கள். எம்மைப் பொறுத்தளவில் எமது அனுபவத்தில் இருந்து கற்றுக் கொண்டதன் அடிப்படையில் சரியான புள்ளிவிபரங்கள் சான்றுகள், தரம் பற்றிய விபரங்கள் இல்லாமல் நாங்கள் சாராய இறக்குமதியை நிறுத்தப்போவதில்லை.

பொருட்களின் தரம், வாடிக்கையாளர்களின் விருப்பம் போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது எம்மிடம் உள்ள உற்பத்தி எவ்வளவு காலத்திற்கு நுகர்வுத் தேவையை பூர்த்தி செய்யும் என்பனவற்றை மையமாக வைத்து சரியான கணக்கு விபரங்களுடன் மதிப்பீடு செய்து ஆய்வு அறிக்கை ஒன்றைத் தயாரித்து முயற்சி எடுக்கவேண்டும். எனவே எதற்கும் சரியான தகவல்களுடன் தரமான உற்பத்தி என உறுதிப்படுத்தப்படுமானால் நடவடிக்கைகள் எடுப்பது சுலமாக இருக்கும்.

வடக்கு கிழக்கில் உள்ள ஒவ்வொரு கூட்டுறவாளனும் ஒன்றுசேரும்போது உலகத்தின் கவனம் எம்மீது ஈர்க்கப்படும். ஐக்கிய நாணய சங்கங்களாக இருந்தாலும் சரி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தாலும் சரி திருகோணமலையில் எமது நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். யாழ். மாவட்டத்தில் நடைபெறுகின்ற ஒரு மாநாட்டிற்கு தீர்மானங்களை அனுப்பிவிட்டு கூட்டத்திற்கே அவர்கள் வரவில்லை. இந்நிலையில் மட்டக்களப்பு, அம்பாறை என 08 மாவட்டங்களில் உள்ளவர்களை ஒன்று சேர்ப்பதில் கஷ்டங்கள் உண்டு.

மக்கள் இன்றைக்கு கூட்டுறவில் இருந்து நீண்டதூரம் விலகிப் போயுள்ளார்கள். இதற்குக் காரணம் என்ன? என்று ஆராய்ந்து பார்த்தால் ஒருசிலா் விடுகின்ற தவறுகளும், பிழைகளுமே காரணமாகும். இவை மக்களை வெகுவாகப் பாதிக்கச் செய்கிறது. எனவே நாம் எல்லோரும் கூட்டுறவாளர்கள் என்ற ரீதியில் செயற்பட வேண்டும்.

நெறியாளர்குழுவில் ஒரு உறுப்பினராக இருந்தால் தான் விரைவாக செயற்படலாம் என்று பணியாளர்களும், பணியாளர்கள் எல்லோரும் ஒத்துழைக்காவிட்டால் சங்கத்தை நடத்தலாம் என்று நெறியாளர்களும் நினைக்கக் கூடாது. எனவே கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்களும், நெறியாளர்களும் சரியாக நடந்து கொள்ள வேண்டும். காசோலைகளில் நெறியாளர்குழுவில் ஒருவர், பணியாளர் ஒருவர் என இரண்டு பேர்கள் ஒப்பமிடுகிறார்கள். அங்கு இரு வருக்குமிடையில் சமன்பாடு உண்டு. இரண்டு பக்கமும் சேர்ந்து தான் கூட்டுறவை வளர்க்க வேண்டும்.

கூட்டுறவுத் தலைமைத்துவத்தை பொறுத்தவரையில் மூன்று வருடத் திற்கு ஒரு தலைமை தேவை யில்லை. தொடர்ந்து இருந்தால் தான் அனுபவம் வரும் என்று கூறலாம்

கூட்டுறவு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அவற்றை அரச நிறுவனங்கள் மாதிரி நடத்த முடியாது. காலை 8.00 மணிக்கு திறந்து மாலை 5.00 மணிக்கு பூட்டுவதனால்அக்கிளை இலாபத்தில் இயங்க முடியாது. சிலவற்றில் நாம் தனியார்துறை மாதிரி இருக்க வேண்டும். சிலவற்றில் அரசாங்கம் மாதிரி இருக்கவேண்டும், எந்த நேரத்தில் எப்படி இருக்கவேண் டுமோ அப்படி நின்று செயற் பட்டால் தான் வெற்றி அடைய முடியும்.

கூட்டுறவு நிறுவனங்களுக்கு முன்பு பல சலுகைகள், வசதிகள செய்யப்பட்டிருந்தன. கூட்டுறவாளர்களும், கூட்டுறவு நிறுவனங்களும் செய்த சேவைகள் அளப்பரி யது. இம் மாநாட்டில் எடுக்கப் பட்ட தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படவேண்டும். இவை தொடர்பாக அடுத்த மாநாட்டில் குறைகளைப் பிரஸ்தாபிக்கும் சந்தர்ப்பம் ஏற்படக் கூடாது. இம்மாநாடு சிறப்புற நடைபெறவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியதாகும் என்று கூறிய இளஞ்சேரன் எமது தரப்பில செய்யக் கூடியவற்றை எமது தலைமைப் பீடத்திற்கு அனுப்பி ஒத்துழைப்பேன் என்று கூறினார்.

# கூட்டுறவில் பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகரிக்கவேண்டும்

கூட்டுறவு என்னும் கட்டமைப்பு இன்று, நேற்று உருவான ஒரு கட்டமைப்பு அல்ல. மிகவும் நீண்டகாலமாக உருவாகிய கட்டமைப்பாகும். இன்று அது பரந்து விரிந்து போயுள்ளது. இதனால் அந்த அமைப்புக்கு சில ஆபத்துக்களும் நேர்ந்துள்ளது.

உங்களது கோரிக்கைகளை நாம் பார்க்கும்போது அங்கத்தவர் பணம் செலுத்தும் பட்டியலில் பங்கும் பணம் ரூபா 100 செலுத்தியவர்களை மட்டுமே சேர்க்க வேண்டும் என்றும் அதற்குட்பட்டவர்களை அங்கத்தவர் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்றும் கோரியுள்ளீர்கள். கூட்டுறவு என்னும் ஆத்மாவை நாம் விட்டுவிடாது அதனை கட்டிக்காக்கவேண்டும். மக்களுக்குச் சேவைசெய்வதற்கென பல அரசசார்பற்ற நிறுவனங்கள் தோற்றம்பெற்றுள்ளன. அவற்றை கூட்டுறவு அமைப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எளிமையாகவும் சிக்கனமாகவும் செயற்படும் திறன் கூட்டுறவுக்கு உள்ளது.

இத்தகைய கூட்டுறவை நவீன மயப்படுத்த வேண்டும். கூட்டுறவு நிறுவனங்களுக்கு கணனி வசதி கள் கட்டாயம் செய்து கொடுக் கப்படவேண்டும். அதற்கு நாடா ளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு பொது நிதியை உருவாக்கினால் அதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்களுக்கு கணனி வசதிகளைச் செய்துகொடுக்கலாம். எரிபொருள் விற்பனை நிலையங்களைப் பொறுத்தவரையில் அவை நவீன மயப்படுத்தவேண்டும்.


அடுத்து கூட்டுறவு அமைப்பில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பது கவலையளிக்கும் ஒரு விடயமாகும். கூட்டுறவு மாநாட்டில் கூட பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இங்கு காணப்படுகின்றது.

எனினும் காலப்போக்கில் கூட்டுறவு அமைப்புகளில் 50%பெண்கள் பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பு உருவாகவேண்டும்.

தெற்கில் இருந்துவரும் சாராயத்திற்கு அதிகவரியை வசூலிப்பதன் மூலம் நிலைமையை ஓரளவுக்கு கட்டுப்படுத்தி எமது உற்பத்திப் பொருள்களை குறைந்த விலையில் விற்பனை செய்யக் கூடிய சூழலை எற்படுத்தலாம் என்பது அபிப்பிராயமாகும் என்று கூறினார்.



# நினைவு முத்திரை வெளியிட முயற்சியெடுப்போம்



வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 50 வீதமானவை இலாபத்திலும், ஏனையவை நட்டத்திலும் இயங்குகின்றன. இதனைப் போல் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் 40 வீதமானவை நட்டத்தில் இயங்குகின்றன. இதனைப் பற்றிச் சிந்திக்கும் ஒருவாய்ப்பினை இம் மாநாடு ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தளவில் இங்குள்ள கூட்டுறவாளர்கள் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் கூட்டுறவை வளர்த்து வருகிறார்கள். இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை வளர்த்தவர்கள் யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்தான் என்று கூறப்பட்டவர்கள் இன்று ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையினால் அதனை வளர்க்க முடியாத நிலையில் இருந்து கொண்டு மக்களுக்கு அவர்களின் தேவைகளை அறிந்து செயற்பட்டுவருகிறார்கள். ஏனென்றால் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து கொண்டுதான் நாம் கூட்டுறவை வளர்க்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம்.

கூட்டுறவு நிறுவனங்கள் இலாபத்தில் இயங்கக்கூடிய வகையில், உற்பத்தி, சந்தைப்படுத்தல், விற்பனை, முகாமைத்துவம் என்பவற்றில் நவீன உத்திகளை கையாளவேண்டும். இதற்குக் கூட்டுறவுக் கல்வியை நாம் முனைப்போடு முன்னெடுத்துச் செல்லவேண்டும். தென் இலங்கையில் பல நடவடிக்கைகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தை எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு சங்கத்திலும் ஒவ்வொரு கணனி பெயரளவில் இருக்கிறதே தவிர அதனை முழுமையாகப் பயன்படுத்தி முழுப்பயனையும் அடையும் நிலையில் நாம் இல்லை.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திகள் அதிகரித்து வருகின்றபோதும் அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. உற்பத்திகளைப் பொறுத்தவரையில் அவற்றின் தரம் பேணப்படவேண்டும். தரம் பேணப்பட்டால் தான் சந்தை வாய்ப்பிலும் உரிய இடம் கிடைக்கும். சட்டரீதியான சில கட்டுப்பாடுகளினால் உற்பத்தி செய்யும் சங்கமே அதனை விற்பனை செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறது.

தம்புள்ள பிரதேசத்தில் உள்ளதுபோல் எமது பிரதேச உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் மையமும், கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தும் வசதியும் எமக்கு கட்டாயம் தேவை. அண்மையில் விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டிலும் உற்பத்திக் குழுக்களினால் இதுபோன்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. எனவே இதுதொடர்பான நடவடிக்கைகளை அரச அதிபர் எடுப்பார் என நம்புகிறேன்.அடுத்து கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களுக்கு நினைவு முத்திரை வெளியிடுவது தொடர்பான உங்களது கோரிக்கை சம்மந்தமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் நாம் எல்லோரும் சேர்ந்து தபால் அமைச்சருடன் தொடர்பு கொண்டு நினைவு முத்திரை வெளியிட முயற்சிகளை மேற்கொள்ளுவோம்.

வடக்கு, கிழக்கிற்கான சம்மேளனம் ஒன்றை உருவாக்குகின்ற காலம் வெகுவிரைவில் வரும். அப்போது இச்சம்மேளனம் கூட்டுறவுத் திணைக்களத்தின் சகல வேலைகளையும், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினது வேலைகளையும் செய்கின்றபோது எங்களை வளர்த்து விட்டவர்கள் என்ற பெருமையுடன் அவர்கள் எங்களுக்கு ஆலோசகர்களாகப் பணியாற்றும் காலம் விரைவில் வரும் எனக் கூறினார்.

# தீர்மானம் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி தலைமை உரையில் கூறியாவது.

இன்றைய சூழ்நிலையில் யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்தும் பல சவால்களுக்கும், பல பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளன. கூட்டுறவு நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களையும், பிரச்சனைகளையும் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து எதிர்கொண்டு அவற்றுக்குத் தீர்வு காணும் முயற்சியாக இன்று இங்கு கூடியுள்ளோம்.

கூட்டுறவு நிறுவனங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காணத்தக்க விதத்தில் கூட்டுறவுத் துறையோடு தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இம்மா நாடடிற்கு அழைத்துள்ளோம். ப.நோ.கூ.ச., ப.தெ.வ .அ.கூ.சங்கங்கள், சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசம், வலிகாமம் ப.தெ.வ.அ. கூ.சங்கங்களின் கொத்தணி, யாழ். மாவட்ட மகளிர் குழு, யாழ். மாவட்டக் கூட்டுறவு முகாமைத் துவ அபிவிருத்தி ஆலோசனைச் சபை ஆகியன தங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளனர்.

கூட்டுறவு நிறுவனங்களின் பிரச்சனைக ளைத் தீர்க்கக் கூடிய சகல தரப்பினர்களும் இங்கு வருகை தந்துள்ளார்கள். இச்சந்தர்ப்பத்தில் இம்மாநாட்டில் கூட்டுறவு நிறுவனங்களின் பிரச்சனைகளுக்கு நாம் தீர்வுகாண முடியாவிட்டால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு எந்த விமோசனமும் ஏற் படப்போவதில்லை.

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களும், கூட்டுறவாளர்களும் தொடர்ந்தும் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமானால் அவர்கள் நிதிநிலையில் ஸ்திரத்தன்மை கொண்டவர்களாகவும், திகழ்ந்தால்தான் கூட்டுறவு நிறுவனங்களை நல்ல முறையில் நடத்த முடியும்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டம் தற்பொழுதும் தொடர்ந்து இருந்து வருவதால், இன்றைய சூழ்நிலையில் அச்சட்டத்தினால் எந்தவிதமான பலனும் ஏற்படப் போவதில்லை.

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு தொடர்பான முன்மொழிவுகளையும் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வைத்துள்ளன. எனினும் அவர்கள் இன்றைய மாநாட்டிற்குச சமுகம் தரவில்லை. இருந்தபோதிலும் இம் முன்மொழிவுகள் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

# கூட்டுறவுச் சங்கங்களை........

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதற்கான ஏற்பாடுகள் எல்லாம் உள்ளன. ஆனால் நாங்கள் ஏதோ காரணத்திற்காக அந்த உபவிதிகளை ஏற்றுக் கொள்ளாமல் விட்டுவிட்டோம். மகளிர்களை சேர்த்துக் கொள்வதற்கான தடைகள் ஏதும் இல்லை. இன்றைக்குக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க உபவிதிகளை, யாப்புகளை எடுத்துப் பார்த்தால் அங்கு இரண்டு மகளிர்களைக் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்வதில் எந்தவிதமான தடையும் இல்லை. பணிப்பாளர்சபை உறுப்பினர்களை அதிபரிப்பதிலும் எந்த விதமான தடையும் இல்லை.

பணியாளர் ஒருவரைப் பணிப்பாளர் சபையில் சேர்த்துக்கொள்வதென்பது முன்பு இருந்து வந்த தொன்றாகும். உபவிதியில் இது இடம்பெற்றிருந்தது. இது பின்பு நீக்கப்பட்டது. இந்த விடயத்தில் நீங்கள் திருத்துவதற்குச் சுதந்திரம் உண்டு.

### தலைவர் பதவி

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஒருவர் தலைமைப் பதவியை வகிக்கக் கூடாது என்பதை சட்டமாக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதற்கு தடையேதும் இருக்க முடியாது.

### பங்குப் பணம்

பங்குப் பணம் 100 ரூபாதொடர்பான உங்கள் முன் மொழிவு எங்களது உபவிதியில் இப்பவும் உண்டு. எப்படி என்று சொன்னால் வெவ்வேறு சரத்துக்களிலும் எங்களுடைய இந்த ஆதங்கம் அங்கே பதியப்பட்டிருக்கிறது. உபவிதிகளிலே இதனை நாங்கள் அமுல் நடத்தாமல் இருந்துவிட்டு, சரத்து ஒன்றைக் கொண்டு வருவதற்கு யோசனை செய்கிறோம். எந்தவிதமான திருத்தமும் இல்லாமல் இந்த நோக்கத்தை இந்தப் பிரேரணையின் மூலம் நிறைவேற்ற முடியும்.

1992ம் ஆண்டு சட்டம் திருத்தப்பட்ட கையோடு 1993, 94 காலப் பகுதியில் இந்த உபவிதிகள் எல்லாவற்றையும் திருத்தும்போது அதில் ஒரு திகதி குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது 31.05.94ம் திகதிக்குப்பிறகு 100 ரூபா கட் டாதவர்கள் எல்லோரும் அங்கத் துவத்தை இழப்பர் என்று உப விதியில் திருத்தம் செய்து வைத்திருக்கிறார்கள். அதன்பிரகாரம் 100 ரூபாவுக்குக் குறைந்த அங்கத்தவர்கள் அனைவரும் இன்றைக்கு அங்கத்தவர்கள் இல்லை. நாங்கள் இன்னமும் குழப்ப சூழ்நிலையிலேயே உள்ளோம். உபவிதித் திருத்தத்தை மறந்துபோய்விடடோம். அதன்படி இவர்களை எல்லாம் அங்கத்தவர்களாக எடுக்க வேண்டியதில்லை.

### கடன்பெற்றுத் தவணை தப்பிய அங்கத்தவர்கள்:

கடன் பெற்ற அங்கத்தவர் தொடர்பிலும் பிரச்சனை உண்டு. கடன் பெற்றுத் தவணை தப்பிய அங்கத்தவர் ஒருவர் பணிப்பாளர் சபைக்கு வரமுடியாது. ஆனால் அவர் வாக்காளர் பட்டியலில் இடம் பெறலாம். இதுதான் உண்மையான நியதி. ஒருவர் கடன் தவணை தப்பியவர் என்ற இடத்தில் பெரிய பிணக்கு இருக்கிறது. எங்களிடையே எவரிடம் கேட்டாலும் அது சுப்பிறீம் கோட் தீர்த்தால்தான் அவர் கடன் தவணை தப்பியவர் என்று, உண்மை அப்படி அல்ல. தான் தவணை தப்பியவர் என்று சொன்னால், நாங்கள் சுப்பிறீம் கோட்டுக்கு போய்த் தீர்ப்பு எடுக்க வேண்டிய தேவையில்லை. ஆனால், கடனைத் தான் எடுக்கவில்லை என்று பிணக்குப்படுபவருக்குத்தான் நீதிமன்றத் தீர்ப்பு அவசியம். எனவே இந்த வரைவிலக்கணத்தையும் நாங்கள் எடுத்துக்கொண்டு இவற்றை அங்கத்தவர் பட்டியலில் இருந்தோ, வாக்காளர் பட்டியலில் இருந்தோ, நீக்காமல் விடுவோம். இதற்கு திருத்தம் அவசியம் இல்லை. நீங்கள் விரும்பினால் செய்வதில் ஆட்சேபனை இல்லை. பல உபவிதிகளின் தொகுப்புகளின் சாரமும் இதுதான்.

### தனியான கூட்டுறவு வங்கி வேண்டும்

யாழ். மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்திற்குத் தனியான 'ஒரு கூட்டுறவு வங்கி அமைப்பை உருவாக்கக் கூட்டுறவு ஆணையாளர் அங்கீகாரம் தரவேண்டுமென்று சமாசத்தலைவர் கோரியுள்ளார். அங்கீகாரம் கோர வேண்டுமென எங்கே இருக்கிறது. ஆணையாளர் அங்கீகாரம் தரவேண்டுமென்ற நடைமுறை எங்கேயாவது இருக்கிறதா? என்று உதவி ஆணையாளர் வினாவினார். (அப்போது சி.க.கூ. சங்க சமாசத்தலைவர் தனது கருத்தை முன்வைத்தார்.)

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

நீங்கள் கோருகின்ற அங்கீகாரம் எந்தச் சரத்தின் கீழ் கோருகின்றீர்கள் என்று எங்களுக்கு கடிதத்தில் வருமாக இருந்தால் பிரச்சனை எதுவும் இருக்கமாட்டாது அங்கீகாரத்தைக் கோரும் போது மொட்டையாக எழுதாமல் எந்தச் சரத்தின் கீழ் என்று சுட்டிக் காட்டினால் மிச்சம் நாங்கள் பார்த்துக்கொள்ளுவோம். நாங்கள் எல்லாரும் கூட்டுறவாளர்கள். எல்வோருமாக ஒத்து விட்டுக்கொடுத்துச் செய்வோம். சில பிரச்சனைகளை அரசாங்க மட்டத்தில் தீர்ப்பது கஷ்டம்.

சி.க.கூ.ச. சமாசத்தின் நட்டம் தொடர்பாக ஒரு விண்ணப்பத்தை எமக்குச் சமர்ப்பித்தால் நாங்கள் அதனை ஆணையாளருக்குச் சிபார்சு செய்து அனுப்பிவிடுகிறோம்.

### பதவி நிர்ணயம்:

இது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விடயம் என்றாலும் நான் உங்களுடன் பேச வேண்டும் என்பதற்காகப் பேசுகின்றேன். கூட்டுறவுச் சங்கங்கள் பதவி நிர்ணயம் செய்யும்போது வீண்காலதாமதமும், பாரிய செலவும் வருடக் கணக்கில் பணியாளர்களைத் தற்காலிகமாக வைத்திருப்பது. இதில் எந்த விதமான பிரச்சனையும் இல்லை. நான் முன்னர் சொன்னது போல் கூட்டுறவாளர்களின் பலவீனத்தைக் கருதித்தான் பணியாளர் கோவைகளை எல்லாம், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு நம்பிக்கையீனம் காரணமாக அங்கே கொண்டுவாருங்கோ என்று கூறியது தகுதி இல்லாத. வர்களுக்கு வேலை கொடுத்து விடுவார்கள், வேறுஅதை, இதை செய்து போடுவார்கள் என்று கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு நம்பிக்கையீனப்பட்டது.

யாழ். மாவட்டக் கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச் சபையினர் ஆளணித்திரட்டில் பொதுமுகாமையாளர் பதவி, ஏனைய நடுத்தர முகாமையாளர் பதவிகள் தவிர்ந்த ஏனைய அனைத்தும் பதவிகளின் நாமங்களை "முகாமைத்துவ உதவியாளர்கள்" என மாற்றி அமைத்து, மேற்படி பதவியில் தரப்படுத்தி அமர்த்துதல் வேண்டும் எனக் கோரியுள்ளனர். இப்போதுதான் நீங்கள் வழிக்கு வந்துள்ளீர்கள், பணியாளர்கள், பொதுமுகாமையாளர்கள் அப்படி இப்படி என்று யாரும் இருக்க முடியாது என்பதுதான் எனது கருத்து. சகலரும் பணியாளர்கள், சகலரும் பணிப்பாளர்கள், சகலரும் பாவனையாளர்கள், சகலரும் கூட்டுறவுச் சங்கத்தின் சொந்தக்காரர்கள் தான். இதற்காகச் சகலரும் இணைந்து ஆணைக்குழுவுடன் போராடவேண்டும்.

சங்கத்தின் தலைவர், நெறியாளர்குழு உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் முறை நீக்கப்பட்டுச் சகல அங்கத்தவர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதில் எந்தவிதமான பிரச்சனையும் இல்லை. கூட்டுறவாளர் எல்லோரும் ஒன்று சேர்ந்து சாத்தியமான ஒரு வரைவைத் தயாரித்து ஆணையாளருக்கு நாங்கள் சமர்ப்பிப்போமானால் அவர் அதனை ஏற்றுக்கொண்டு வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் அதனைச் செய்வார்.

தங்களது பதவிக்காலத்தில் தொடர்ச்சியாகச் சங்கங்களை நட்டத்தில் இயக்கிய இயக்குனர் சபை உறுப்பினர்களை அடுத்து வரும் காலப்பகுதிகளில் நெறியாளர்குழுவில் இடம்பெற முடியாதவகையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். இதில் பிரச்சனை இல்லை. இதுவும் உப விதிமூலமாகத் தேவை இல்லை. நட்டத்தில் இயங்கினால் அடுத்த முறை நடைபெறும் தெரிவுக்கு இல்லாமல் நீக்கக் கூடியதாக அதிகாரம் எல்லாம் எங்களுக் குண்டு.

அடுத்து கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் செயற்பாடுகளுக்கும், ஒருங்கிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்திக்கும் கூட்டுறவு நிதியில் இருந்து நிதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியுள்ளீர்கள். இதில் பிரச்சனை இல்லை. கூட்டுறவுக் கல்வியை வளர்ப்பதற்காகத்தான் கூட்டுறவு நிதி உருவாக்கப்பட்டது. இதற்கு மறுப்புகளோ தடைகளோ இல்லை. ஆனால், நிதிப்பங்கீட்டின் போது தான் எந்தமாவட்டத்திற்குக் கூட, எதற்கு குறைய என்ற ஒரு நிலை உருவாகக் கூடும்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவரின் கோரிக்கை சம்பந்தமாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையார் கருத்துத் தெரிவிக்கையில் மூலதனச் செலவுகளுக்குப் பொதுச்சபையின் அங்கீகாரம் பெற வேண்டியது அவசியம் தான். ஆனால் ஒவ்வொரு மூலதனச் செலவுக்கும் பொதுச் சபையைக் கூட்டி அங்கீகாரம் பெற வேண்டிய அவசியம் இல்லை. வருட ஆரம்பத்திலேயே நாம் எவ்வளவு மூலதனச் செலவை செய்யப்போகிறோம் என்று "வரவு செலவுத் திட்டம்" ஒன்று தயாரிக்கிறோம். அதனைத்தொடர்ந்து "மொத்தக் கடன் எல்லை" (எம்.சி.எல்) என்று தயாரிக்கிறாம். இதில் எல்லா மூலதனச் செலவுகளையும் போட்டு அங்கீகாரம் பெற்று இருந்தால் அதனைப் பணிப்பாளர் சபையில் சமர்ப்பித்து அங்கு எடுக்கும் தீர்மானத்துடன் செய்வதில் எந்தவிதமான பிரச்சனையும் இல்லை.

---

## கூட்டுறவு விழாவில் பணியாளர்கள் கூட்டுறவாளர்கள் கௌரவிப்பு

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தின் கூட்டுறவுவிழா சங்கத் தலைவர் திரு.சி.சிவமகாராசா தலைமையில் வலி.வடக்கு பிரதேச செயலக திறந்தவெளி அரங்கில் (துர்க்காபுரம்) நடைபெற்றது. இவ விழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.கணேஸ் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

வலி.வடக்கு பிரதேச செயலர் திரு.சு.முரளீதரன், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செ.கனகசபாபதி, காங்கேசன் துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு.பொன்.கணேசமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு.பெ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு.சு.சிவசுப்பிரமணியம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் சங்கக் கூட்டுறவாளர்களுக்கு விருதுகளும், சங்கப் பணியாளர்களுக்கு தங்கப் பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இறந்த பணியாளர்களின்பிள்ளைகளுக்கான கல்வி ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்பட்டன.

### கௌரவிக்கப்பட்ட இளைப்பாறிய பணியாளர்கள்

திருவாளர்கள் க.அமரசிங்கம், மா.நடராசா, வ.வல்லிபுரம்.

### பாராட்டுப்பெற்ற பதவி விலகிய பணியாளர்கள்

திருவாளர்கள் ச.சந்திரசேகரன், மு.தயாபரன், சி.சின்னையா, செ.கருணாகரன்

### தங்கப்பதக்கம் பெற்ற பணியாளர்கள்

திரு.மு.சிறிகரன் - (பதில் கிளை முகாமையாளர்,) திருமதி.சி.சிவனேசன் (எழுதுவினைஞர்), திரு.சி.சண்முகதாஸ்- (விற்பனையாளர்), திரு.க.இளையதம்பி (விற்பனையாளர்), திரு.சி.செல்வநாயகம் சாரதி.

### விருதுபெற்ற கூட்டுறவாளர்கள்

திருவாளர்கள் க.இராசரத்தினம் கிளை-1, வ.ஏகாம்பரம் கிளை 2, இ.பூரணலிங்கம் கிளை-10, க.சத்தியநாதன் கிளை-10, க.கலியுக வரதன் கிளை-10, ச.நடேசபிள்ளை கிளை-10, வை.தர்மபாலச் சந்திரன் கிளை-13, கோ.இராமச்சந்திரன் கிளை-13, த.தங்கேஸ்வரன் கிளை-18, சு.மகலிங்கம் கிளை-18, மி.அ.யேசுதாசன் கிளை-19, த.தம்பிப்பிள்ளை கிளை-22, செ.பொன்னையா கிளை-23, நா.கதிரவேலு கிளை-35, செ.சிவபாலச்சந்திரன் கிளை-38, க.கந்தசாமி, கிளை-39, திருமதி.சி.மகேஸ்வரி கிளை-16.

## வாகன சுத்திகரிப்பு நிலையம் திறப்பு

சாவகச்சேரி புகையிரத வீதியில் அமைந்துள்ள சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வாகன சுத்திகரிப்பு நிலையத்தை முதன்மைவிருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. என.ரவிராஜ் அண்மையில் திறந்து வைத்தார்.

சங்கத்தலைவர் எஸ்.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பொ.சிவலிங்கம் (கணக்காய்வு) வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் புதிய விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் அனுபவம் மிக்க பணியாளர்கள் வேலை செய்வதாகவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒருமாத கடன் அடிப்படையில் வாகனங்கள் சுத்திகரிப்பு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் 30.08.2005 இல் நடைபெற்ற போது திரு.கி.இராசாதலைவராகவும், திரு.சு.சின்னராசா உபதலைவராகவும்,திரு.கா.குணராசா செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நெறியாளர் குழு உறுப்பினர்களாக திருவாளர்கள், வெ. ஜெயபாலன், செவரோதயன், கி.யோகநாதன், மா.லோகேஸ்வரன், யோ.லூயிஸ் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## நூல்கள் அறிமுகமும் கூட்டுறவாளர் கௌரவிப்பும்

கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் 83 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழாவினை பல்வேறு நிகழ்வுகளுடன் கோலாகலமாக கொண்டாடியுள்ளது.

சங்கத்தின் தலைவர் திரு.த.சிதரம்பரப்பிள்ளை தலைமை யில் நடைபெற்ற இவ்விழாவில் கூட்டுறவுக் கருவூலம், கூட்டுறவுக் கோர் அறிமுகம் ஆகிய இரண்டு கூட்டுறவு நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள், கூட்டுறவாளர், பணியாளர்கள், கௌரவிப்பும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கல். பணியாளர் ஊக்குவிப்பு, போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன.

83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு 1.7.2005 தொடக்கம் 31.07.2005 வரை சங்க கிராமிய வங்கிகளில் 5000 ரூபாவுக்கு மேல் நிலையான வைப்புச் செய்தவர்களுக்கு 10% வீதவட்டியும், இக்காலப் பகுதியில் அத்தியாவசிய பாவனைப் பொருள்கள் அரிசி, மா, சீனி, பருப்பு போன்றவற்றை பாவனையாளர்களுக்கு சந்தை விலையிலும் குறைந்த விலை யில் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விற்பனை நிலையம் திறந்து வைப்பு

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புளியங் கூடல் சந்தியில் மாதிரி விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துள்ளது.

சங்கத்தலைவர் திரு.தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடை பெற்ற இவ்வைபவத்தில் யாழ்.வேணி களஞ்சிய உரிமையாளர் திரு.கு.கங்கை வேணியன், காரைநகர் ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளர் திருமதி சொ.சிவசோதி, கிளைக்குழுத்தலைவர் திரு.ச.திருவருள், ஊர்காவற்றுறை வர்த்தக சங்கத்தலைவர் திரு.இ.அஞ்சலோ, புளியங்கூடல் வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த திரு.வி.விநாயகமூர்த்தி ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தனர்.

மாதிரி விற்பனைநிலையத்தின் பெயர்ப் பலகையை ஊர்காவற்றுறைப் பிரதேச பொறுப்பாளர் திரு.நா.ஈழமாறன் திரைநீக்கம் செய்து வைக்க விற்பனை நிலையத்தை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு.க.ஸ்ரீ மோகனன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

சமூக சேவையாளரும் பிரபல வர்த்தகருமான திரு.கு.கங்கை வேணியன் வியாபாரத்தை ஆரம்பித்து வைத்தார்.

சங்கத்தின் உபதலைவர் திரு.சு.தனபாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்திய பின் சங்கத்தலைவர் திரு.தி.சுந்தரலிங்கம் தலைமை உரை நிகழ்த்தினார். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர், திரு.க.ஸ்ரீமோகனன், கூ.அ.உதவி ஆணையாளர், திரு.செ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் திரு.ப.கனகலிங்கம், ஊர்காவற்றுறை அரசியல்துறைப்பொறுப்பாளர் திரு.நா.ஈழமாறன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினர் திரு.சி.விஜிதரன் (பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை, யாழ்ப்பாணம்) அவர்களின் பிரதிநிதியாக திரு மேகதூதன், கலந்து கொண்டார். மற்றும் கண்ணன் களஞ்சிய உரிமையாளர் திரு.தா.பிரபாவும் கலந்துகொண்டார். சங்க பொதுமுகாமையாளர் திரு.த.ஜெயராசா நன்றிகூறினார்.

# 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா போட்டி முடிவுகள்

83 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை பாடசாலை மாணவர்கள், சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் மத்தியில் நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு.

### 01.பேச்சுப்போட்டி

அதிமேற்பிரிவு:1ம் இடம் : டக்ஷிகா தேவராசா, யா.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

2ம் இடம் : யோ.கேந்திரா காயத்திரி,யா. யூனியன் கல்லூரி

3ம் இடம் : ஞானச்சந்திரன் போல் அன்ரன்,யா.இணுவில் இந்துக்கல்லூரி.

4ம் இடம் : மோகனதாஸ் சசிதா,யா. வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

5ம் இடம் : டடி சிவாஸ் செல்வகுமாரி டயானி, யா.கரம்பன் சிறியபுஸ்பம் மகளிர் மகாவித்தியாலயம்.

### 02.மேற்பிரிவு: தரம் 10, 11

1ம் இடம் : சிறிக்குமாரன் சிவமைந்தன்,யாழ். இந்துக்கல்லூரி.

2ம் இடம் : லிங்கேஸ்வரன் நரேஷ்குமார், யா.கொக்குவில் இந்துக் கல்லூரி

3ம் இடம் : இராஜகுலசிங்கம் டிலானி,யா. அத்தியார் இந்துக் கல்லூரி.

4ம் இடம் : சக்திவேல் கார்த்திகா, யா.மெதடிஸ் மிஷன் கல்லூரி.

5ம் இடம் : செல்வநாயகம் திலக்ஷன், யா.மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

### 03.மத்திய பிரிவு: தரம் 8,9

1ம் இடம் : விஜயரட்ணம் கார்த்திகன்,யா. கொக்குவில் இந்துக்கல்லூரி.

2ம் இடம் : தவராசா நாராயணி,யா.கொக்குவில் இந்துக் கல்லூரி.

3ம் இடம் : தேவராஜா விதுஷன்,யா.கொக்குவில் இந்துக் 'கல்லூரி.

4ம் இடம் : யோகநாதன் ஜயந்,யா. இந்துக் கல்லூரி

5ம் இடம் : அன்ரன் கொன்ஸ்ரன்ரைன் மேரி கொன்சிரா,யா. ஊர்காவற்றுறை புனித மரியாள், றோ.க.மகளிர் வித்தியாலயம்

### 04.கீழ்ப்பிரிவு : தரம் 6,7

1ம் இடம் : சத்தியதாசன் யூட நிதர்சன்,யா. புனித பத்திரிசியார் கல்லூரி.

2ம் இடம் : கென்றி ஆன் டொவினா,யா.இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்.

3ம் இடம் : அருணாசலம் பாலகுமார்,யா. உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.

4ம் இடம் :சிவபாலன் கயானா, யா.மகாஜனக் கல்லூரி

5ம் இடம் : புவனேசராசா றாகினி, யா.மகாஜனாக் கல்லூரி

### 05.கட்டுரைப்போட்டி

அதிமேற்பிரிவு : தரம் 12, 13

1ம் இடம் : ரூபதாசன் தபீத்தா, யா.சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

2ம் இடம் : கல்யாணி குமாரசாமி, யா.கொக்குவில் இந்துக் கல்லூரி.

3ம் இடம் : லாவண்யா சுந்தரலிங்கம், யா.கொக்குவில் இந்துக் கல்லூரி.

4ம் இடம் : அரங்ஜா றாதா யா.சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்.

5ம் இடம் : சிறிகஜலக்ஷ்மி பத்மனாத ஐயர்,யா. கொக்குவில் இந்துக் கல்லூரி

### 06. மேற்பிரிவு : தரம் 10, 11

1ம் இடம் : தனுஷா தஸ்மினி மரியதாஸ்,யா. இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்.

2ம் இடம் : சுகாஜினி நவரத்தினம்,யா.மகாஜனாக் கல்லூரி

3ம் இடம் : தே.நாகதீபன், யா.இந்துக் கல்லூரி

4ம் இடம் : விஜயகுமாரி விஜயகுமார், யா.மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

5ம் இடம் : மயூரி மகேந்திரன் யா. பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

### 07.மத்திய பிரிவு : தரம் 8, 9

1ம் இடம் : சியாம் அஜந்தன், யா.புனித பத்திரிசியார் கல்லூரி

2ம் இடம் செந்தில்செல்வன் அகிலாஜினி, யா.மெதடிஸ் மிஷன பெண்கள் உயர்தரப் பாடசாலை

3ம் இடம் சந்தானகுமார சர்மா சத்திதாயினி,யா. ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

4ம் இடம்- ஜேம்ஸ் அரியநாயகம் அலிஸ்ரன், யா. புனித அந்தோனியார் நியூமன் கல்லூரி

5ம் இடம் இரத்தினம் ஜதீபா யா. யூனியன் கல்லூரி.

### 08.கீழ்ப்பிரிவு : தரம் 6, 7

1ம் இடம் : அகிலலோகநாயகம் ரதீபனா யா.மகாஜனாக் கல்லூரி.

2ம் இடம் : கஸ்தூரி சத்தியலிங்கம், யா. வேலணை துரைசுவாமி ம.ம.வி.

3ம் இடம் : சத்தியதாசன் யூட நிதர்சன்,யா. புனித பத்திரிசியார் கல்லூரி.

4ம் இடம் கந்தசாமி யருஷனா யா. மகாஜனாக் கல்லூரி

5ம் இடம் லோகநாதன் ஷர்மினி,யா. விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி

### *சித்திரப் போட்டி*

### 09.அதிமேற்பிரிவு தரம் 12, 13

1ம் இடம் : தவயோகராசா மயூதரன்,யா. சேர் வைத்தியலிங்கம் துரைசாமி ம.ம.வி.

2ம் இடம் : பத்மநாதன் விதூஷன், யா. மத்திய கல்லூரி.

3ம் இடம் : நகுலதாசன் ஜெயதாஸ்,யா.சேர் வைத்தியலிங்கம் துரைசாமி ம.ம.வி.

4ம் இடம் : குணசேகரம் யதீஸ்குமார், யா.மத்திய கல்லூரி.

5ம் இடம் சர்மிலா சந்திரதாசன், யா. பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

### 10.மேற்பிரிவு :

1ம் இடம் : யாழினி சண்முகநாதன்,யா. வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

2ம் இடம் : சுப்பிரமணியம் சர்மிலன், யா. உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

3ம் இடம் : அருள்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ, யா.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

4ம் இடம் : சிவராமலிங்கம் சிவகுமாரன்,யா. விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.

5ம் இடம் : விஜிதா ரகுநாதன், யா. வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கரவெட்டி.

### 11.பாடசாலை மாணவர்களுக்கான வினாடி வினாப் போட்டி

1ம் இடம் : யா.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

2ம் இடம் : யா.இணுவில் இந்துக் கல்லூரி.

3ம் இடம் : யா.புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

4ம் இடம் : யா.மத்திய கல்லூரி.

5ம் இடம் : யா.புனித மரியாள் றோ.க.ம. வித்தியாலயம், ஊர்காவற்றுறை.

### 12.அங்கத்தவர் கட்டுரைப் போட்டி

1ம் இடம் : கந்தன் பாலன் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்.

2ம் இடம் : க. முத்துவேலு, உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்.

3ம் இடம் : செல்வி செ.சிவலோஜினி.கோண்டாவில் ப.தெ.வ. அ.கூ. சங்கம்.

### 13.அங்கத்தவர் பேச்சுப் போட்டி

1ம் இடம் : கந்தன் பாலன் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்

2ம் இடம் : சின்னத்துரை அருமைத்துரை, கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

3ம் இடம் : முத்துக்குமாரு தணிகாசலம். புலோலி ப.நோ.கூ. சங்கம்.

### 14.பணியாளர் கட்டுரை :

1ம் இடம் : க.தெய்வேந்திரம், கோண்டாவில் ப.தெ.வ. அ.கூ. சங்கம்.

2ம் இடம் : தா. தவச்செல்வம், கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம.

3ம் இடம் தே.தேவராஜா, கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம்,

4ம் இடம் எ.கோபால சிங்கம்,ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்.

5ம் இடம் : யே. நோர்யசின் ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்.

மா. புலேந்திரன், சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ. சங்கம்

### 15.பணியாளர் பேச்சுப் போட்டி :

1ம் இடம் : தா. தவச்செல்வன்.கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம்

2ம் இடம் : கி. மனோரஞ்சன் வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்.

3ம் இடம் : யே. றோர்யசின். ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்.

### 16.பணியாள் வினாடி வினாப் போட்டி

1ம் இடம் : வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்.

2ம் இடம் : ஊர்காவற்றுறை ப்.நோ. கூ. சங்கம்.

3ம் இடம் : கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

### 17.மகளிர் குழு குழுப்பாடல்

1ம் இம் : கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

### நாடகப்போட்டி

1ஆம் இடம்: வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,

2ஆம் இடம்: துன் னாலை மகளிர் சி.க.கூ.சங்கம்,

3 ஆம் இடம் : அச்சுவேலி ப.தெ. வ.அ.கூ.சங்கம்

---

### யுத்தத்தினால் ......

(4 ஆம் பக்கத். தொடர்)

நிலையங்களைக் கட்டிக்கொடுபதற்கு யு.என்.டி.பி நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது. இதில் முக்கியமாக சேதமுற்ற சங்கங்களின் சொந்தக் கட்டிடங்கள் திருத்தப்படுவதில் சிரமம் இல்லை. வாடகைக் கட்டிடங்களுக்கு நிதி உதவி தரமாட்டார்கள்.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் விவசாய விளைபொருட்களை நியாயமான விலையில் கொள்வனவு செய்து கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்குவதற்கு யாழ். மாவட்டத்தின் மையப்பகுதியில் கொள்வனவு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கோரியிருப்பதை நாம் முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நன்மை பெறக்கூடிய இவ்விடயம் சம்பந்தமாக அரசுக்கு ஆலோசனை ஒன்றை முன்வைக்கலாம் எனக் கருதுகிறேன். தம்புல்ல போன்ற இடங்களில் "சுதந்திர பொருளாதார வலயங்கள்" உருவாக்கப்பட்டு, அங்கு ஒரு மத்திய நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இதே போன்று யாழ். மாவட்டத்திலும் சுதந்திர பொருளாதார வலயங்களை உருவாக்குவதற்கு அரசுக்கு ஆலோசனை வழங்கி யாழ்.மாவட்ட உற்பத்திப் பொருட்களைத் தென்பகுதிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க உள்ளேன். இந்நிலையில் இப் பொருட்களைப் பழுதடைய விடாது ஏ 9 பாதையூடாக உள்ள சோதனை நிலையங்களில் இடம்பெறும் சோதனைகளை துரிதப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

---

## வலிகாமம் கொத்தணியின் கூட்டுறவு தின போட்டிமுடிவுகள்

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி 83வது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு அங்கத்தவர் பணியாளர், மகளிர் முன்பள்ளி ஆசிரியர்கள் மட்டத்தில் நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

***பேச்சுப்போட்டி-அங்கத்தவர்,***

1ம் இடம் : சி.அருமைத்துரை கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

2ம் இடம்: அ. சின்னராசா கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

3ம் இடம்: மு.தவபாலன் தெல்லிப்பளை.ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

***பணியாளர்***

1ம் இடம் : தா.தவச்செல்வன்

2ம் இடம்:தே.தவராசா

3ம் இடம்: க.தெய்வேந்திரம் கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

***மகளிர்***

1ம் இடம்: சி.சிவறஞ்சினி சங்கானை, ப.தெ.வ.அ.கூ. சங்கம்

2ம் இடம்: அ.ஜென்சிகா,

3ம் இடம்: து. துர்காயினி, கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

***முன்பள்ளி ஆசிரியர்***

1ம் இடம்: செ.சிவலோஜினி

2ம் இடம்: ந. சுபிதா

3ம் இடம்:சி. வனஜரூபி கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்

***கட்டுரைப்போட்டி - பணியாளர்***

1ம் இடம்: சி.தவம், மானிப்பாய், ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

2ம் இடம்:தா.தவச்செல்வன்,

3ம் இடம்: க.தெய்வேந்திரம் கோண்டாவில். ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

***மகளிர்***

1ம் இடம்: செ.லக்கி, பண்டத்தரிப்பு, ப.தெ.வ.அ.கூ. சங்கம்

2ம் இடம்: சி.சிவறஞ்சினி சங்கானை, ப.தெ.வ.அ.கூ. சங்கம்

3ம் இடம்: து.துர்காயினி, கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்

***முன்பள்ளி ஆசிரியர்***

1ம் இடம்: இ.சறோஜா, சங்கானை, ப.தெ.வ.அ.கூ. சங்கம்

2ம் இடம்: செ.சிவலோஜினி கோண்டாவில்,ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

3ம் இடம்: கு.சுபாஜினி மானிப்பாய்,ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

***கவிதைப்போட்டி அங்கத்தவர்***

1ம் இடம்: மு.தவபாலன், தெல்லிப்பளை, ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

2ம் இடம்:சி.அருமைத்துரை,

3ம் இடம்: அ. சின்னராசா கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

***பணியாளர்***

1ம் இடம்: தே.தவராசா, கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

2ம் இடம் : தா.தவச்செல்வன் கோண்டாவில்,

3ம் இடம் : மா.தவலிங்கம்வலி,கொத்தணி.

***மகளிர்***

1ம் இடம்:து.துர்க்காயினி,

2ம் இடம்: சி.சிவறஞ்சினி,

3ம் இடம்:அ.ஜென்சியா கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

***முன்பள்ளி ஆசிரியர்***

1ம் இடம்: தே.அனற்காமினி, பண்டத்தரிப்பு, ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

2ம் இடம்: செ.சிவலோஜினி கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

3ம் இடம்: வி.கசில்டா பண்டத்தரிப்பு, ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

***வினாடி வினாப்போட்டி***

1ம் இடம்: கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

2ம் இடம்: வலிகாமம் கொத்தணி, ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

3ம் இடம்: தல்லிப்பளை, ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

***தாச்சிச் சுற்றுப்போட்டி***

1ம் இடம்:மானிப்பாய், ப.தெ. வ.அ.கூ. சங்கம்.

2ம் இடம்: பண்டத்தரிப்பு ப.தெ. வ.அ.கூ. சங்கம்.

3ம் இடம்:தெல்லிப்பளை, ப.தெ. வ.அ.கூ. சங்கம்.

***கயிறிழுத்தல் போட்டி***

1ம் இடம்: கோண்டாவில், ப.தெ.வ.அ.கூ. சங்கம்

2ம் இடம் : தெல்லிப்பளை, ப.தெ. வ.அ.கூ. சங்கம்.

3ம் இடம்: வலிகாமம் கொத்தணி,ப.தெ. வ.அ.கூ. சங்கம்.

*கௌரவிக்கப்பட்ட அங்கத்தவர், பணியாளர் விபரம்:*

***வலி. கொத்தணி***

பணியாளர்கள்: க.சுதாகரன், க.இராசையா, சு.கதிர்காமலிங்கம்.

***சங்கானைச் சங்கம்***

அங்கத்தவர்கள்:வ.மகேந்திரம், இ.தேவராசா, மா.குமாரதாஸ்

பணியாளர்கள்: செ.தம்பிமுத்து

சி. மகேந்திரன்,க. பாலு

***தெல்லிப்பழைச் சங்கம்***

அங்கத்தவர்கள் :க.கந்தசாமி, வ. சிவலிங்கம்,க. சின்னராசா.

பணியாளர்:கா.சிவஞானம், உ. செல்வஞானம், மா.வரதராசா.

***சுன்னாகம் சங்கம்***

அங்கத்தவர்கள்:ச. பஞ்சலிங்கம், க.வலிச்சந்திரன் சி.அருளானந்தம்.

பணியாளர்: இ.மைக்கல் ஆஞ்சலோ,மு. கந்தசாமி, இ. அம்பிகாதேவி

***மானிப்பாய் சங்கம்***

அங்கத்தவர்:ஆ. லோறன்ஸ், க. சின்னராசா, க. இராசதுரை

பணியாளர்: செ. கனகலிங்கம், சோ.ஆனந்தராசா, வ. புஸ்பராணி,

***பண்டத்தரிப்புச் சங்கம்***

அங்கத்தவர்: மா.இரத்தினம், சு. சிவகுமார்,தி.இந்திரசித்தி

பணியாளர் மே.மேரி ஜஸ்மின்,யோ.அந்தோனிப் பிள்ளை, ச.ஞானசீலன்

***கோண்டாவில் சங்கம்***

அங்கத்தவர்: தா.தங்கத்துரை, த.மோகனதாஸ்,சி.விகுமார்.

பணியாளர்: பி.டொமினிக், ப.சந்திரலீலா, த.மனோறஞ்சிதன்

***காரைநகர் சங்கம்***

அங்கத்தவர்:கு.நித்தியானந்தம்,சி.கணேஷ், மு.பரமேஸ்வரன்.

பணியாளர்:சீ.சந்திரமோகன், வே.அம்பிகைபாகன்,வி.கௌஷல்யா

# கள் அடைக்கும் தொழிற்சாலை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் வலிகாமம் கொத்தணியினதும் முன்மொழிவுகள் தொடர்பாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. சி.ஜயாத்துரை கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது.

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கோரிக்கைகள் சம்பந்தமாகச சில முன்மொழிவுகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. பிரேரணைகளை முன்மொழிந்த சங்கங்கள் பல இங்கு வந்திருந்தபோதும் அவைகளின் தலைவர்கள் எவராவது இவற்றை முன்மொழிந்து சில விடயங்களைச் சபைக்குத் தெரியப்படுத்தி இருக்கலாம். இருந்தபோதும் அவர்களின் முன்மொழிவுகளைக் கவனத்தில் எடுத்துப் பார்த்தோமானால், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் பனம்சாராயத்தை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் நாங்கள் பல தடவைகள் முயற்சிசெய்து திணைக்களத்தினூடாக நடவடிக்கைகளை மேறகொண்டபோதும் எதுவும் கைகூடவில்லை. எனவே இங்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூகம் ளித்திருப்பதினால் அவர்கள் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள மதுபானவிற்பனை நிலையங்கள் யாவும் எமது வடிசாலையில் சாராயத்தை நேரடியாகக் கொள்வனவு செய்வதற்குரிய அனுமதியைப் பெறுவதற்குச் சங்கங்கள் முயற்சி செய்தபோதும் அது அவர்களுக்கு வெற்றி அளிக்கவில்லை. எனவே, இதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களே வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு செய்துதரவேண்டும்.

நவீன முறையில் கள்ளை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது சம்பந்தமான நடவடிக்கைகளைத் திணைக்களம் மேற்கொள்ளமுடியும். இத் தொழிற்சாலையை அமைப்பது சம்பந்தமான புள்ளி விபரங்கள் அடங்கிய சாத்தியக் கூற்று அறிக்கையை சங்கங்கள் சமர்ப்பித்தால் அவற்றை ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று கூறினார்.

## 83வது சர்வதேச கூட்டுறவுதினவிழா

வலிகாகம் ப.தெ.வ.அ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும், அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்திய 83வது சர்வதேச கூட்டுறவு தினவிழா மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தலைவர் திரு.இ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கூட்டுறவுபொறுப்பாளர் திரு.அ.உதயன், கூ.அ.உ.ஆணையாளர் (ப.தெ.வ) திரு.சி.ஜயாத்துரை, கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.பெ. கனகசபாபதி, தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு.வீ.கே.அருந்தவநாதன், பண்டத்தரிப்பு ப.தெ.வ. அ.கூ.சங்க தலைவர் திரு.அ. பெனடிக்ற் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

யாழ்.மாவட்ட ப.தெ.வ.அ.கூ நிறுவனங்களின் பணியாளர் நலன புரிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.கா.சிவஞானம், காரைநகர் ப.தெ.வ. அ.கூ.சங்க தலைவர் திரு.மு.கணேஸ், கூ.அ.உ. ஆணையாளர் திரு.சி.ஜயாத்துரை, பாராளுமன்ற உறுப்பினர் திரு. கி.சிவனேசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

இவ்வைபவத்தில் 60 வயதைப் பூர்த்திசெய்து 2004ல் தொழில் புரிந்து ஓய்வுபெற்ற அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர், பணியாளர் நால்வர் கூட்டுறவு இணைப்பாளர் (ப.தெ.வ) திரு.அ.உதயன் அவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு பரிசில் வழங்கி கௌர விக்கப்பட்டனர்.

பேச்சு, கட்டுரை, கவிதை போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு கௌரவவிருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கினார்கள்.

அங்கத்துவ சங்கங்களில் இருந்து தலா 3 அங்கத்தவர்கள, 3 பணியாளர்கள் என்ற வீதம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

பேச்சுப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற பாடசாலை மாணவர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர்களின் பேச்சுக்களும் இடம் பெற்றன.

### சிறந்த சங்கம்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் கொத்தணி தனது அங்கத்துவ சங்கங்களுக்கிடையே நடத்திய முழுமையான செயல் பாடுகள் அடங்கிய சிறந்த சங்கப் போட்டியில் கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம் 2ம் இடத்தையும், தெல்லிப்பழை, ப.தெ.வ.அ.கூ. சங்கம் 3ம் இடத்தையும் பெற்றுள்ளன.

## புதிய கட்டிடம் திறந்துவைப்பு

கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்க காரியாலய கட்டிடத்தை கூ.அ.உ.ஆணையாளர் (ப.தெ.வ) திரு.சி.ஜயாத்துரை திறந்துவைத்தார்.

சங்கத்தலைவர் திரு.செ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கூ.அ. உ. ஆணையாளர் திரு.பொ.சிவலிங்கம் (கணக்காய்வு), இளைப்பாறிய கூ.அ.உ.ஆணையாளர் (ப.தெ.வ) திரு.சு.கணேசமூர்த்தி, வன்னி மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் (ப.தெ.வ), திரு.எ.சின்னத்தம்பி, இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர் திரு.எஸ்.தவநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள், தலைவர்கள், நெறியாளர்கள், மகளிர்கள், பொதுமக்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கூட்டுறவு சபை : 83 ஆவது கூட்டுறவு தின விழா

83வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழா யாழ். மாவட்ட கூட்டுறவு சபையினால் சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் கொண்டாடப் பட்டது. இவ்விழா ஆரம்பமாவதற்கு முன்பு மானிப் பாய் கோவிற்பற்று ப.நோ.கூ.சங்கத்திற்கு முன்பாக உள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் சிலைக்கு கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி, யாழ்.ப.நோ.கூ.சங்க தலைவர் திரு.சொலமன் சூ. சிறில் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து கூட்டுறவாளர்களும் கூட்டுறவுப்பணியாளர்களும் பெருமளவில் அணி திரண்டு, கூட்டுறவுக் கொடிகளுடன் பேரணியாக மானிப்பாய் உடுவில் வீதிவழியாகவும், காங்கேசன் துறை வீதிவழியாகவும் பவனி வந்து சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியை வந்தடைந்தனர்.

இப்பேரணியில் வலிகாமம் ப.தெ.வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன தமது உற்பத்திப் பொருட்களை அலங்கார ஊர்திகளில் வைத்து பவனி வந்தன.

· யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழீழ நிர்வாக சேவை யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு.சி.விஜிதரன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.சி.ஜயாத்துரை (ப.தெ.வ) கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.பொ.சிவலிங்கம் (கணக்காய்வு), இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இவ்விழாவினை ஒட்டி கூட்டுறவு சபையினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதள்களையும் விருந்தினர்களாக கலந்துகொண்டவர்கள் வழங்கி கௌரவித்தனர். இவ்விழாவினை ஒட்டி நடத்தப்பட்ட நாடகப்போட்டியில் முதலாமிடம் பெற்ற வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தினரின் நாடகம் மேடையேற்றப்பட்டது.



யாழ்.மாவட்ட சி.க.கூட்டுறவு.சங்கங்களின் சமாசம் நடத்திய கூ.தின.விழாக் காட்சிகள்

## முகாமையில்.....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேலான மூலதனம் முடங்கிப் போயுள்ளது.

முகாமையில் உள்ளவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக செயற்பட வேண்டுமென்று கூறப்பட்டதுபோல், சுறுசுறுப்பாக இயங்காமையினால ஏற்கனவே முதலீடுசெய்த பணம் முடங்கிப் போய் இருப்பதும் மேலும் 15 லட்சம் ரூபா தேவைப் படுகின்றது. இன்றுள்ள நிலையில் பசும் பாலினை பைக்கற்றில அடைக்கும் திட்டம் ஒரு நல்ல திட்டமாகும். இலங்கையைப் பொறுத்தளவில் நியூசிலாந்திலும், ஹொலண்டிலும், அவுஸ்திரேலியாவிலும் இருந்து பால்மா வராவிட்டால் இங்கு பால் எங்களுக்கும் தட் டுப்பாடாக இருக்கும். ஆனால், அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் பாலை பைக்கற்செய்து தினமும் காலையிலும், மாலை யிலும் விநியோகிப்பார்களாய் இருந்தால் நிச்சயமாகப் பல கோடிக்கணக்கான ரூபாக்களை நாம் சம்பாதிக்க முடியும் எனவே இதனோடு சம்பந்தப்பட்டவர்கள், அதிகாரிகள் அனைவரும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதறகுரிய கட்டிட வசதி தேவைப்படுவதால் அதனை செய்து கொடுக்கவேண்டும். இதற்கு நாம் முன்னுரிமை கொடுத துச் செயற்படவேண்டும். ஏ 9 பாதையால் உற்பத்திப் பொருட்களைக் கொண்டு செல்வதற்குரிய தடைகள், கஷ்டங்களைக் கருத்தில்கொண்டு உளளூர் உற்பத்திப் பொருட்களை பாது காப்பாக வைப்பதற்கு கட்டிட வசதி அவசியம் தேவை எனக் கருதுகிறேன்.

## மூளாய் வைத்தியசாலை தரமுயரவேண்டும்

தென்கிழக்காசிவிலேயே தலைசிறந்த கூட்டுறவு வைத்தியசாலையென மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வர்ணிக்கப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலை சங்கானை பிராந்தியத்தில் அமைந்திருப்பது எமக்கு பெருமைதரக்கூடிய விடயமாகும். யுத்த அனர்த்தங்களினால் பெரும் பாதிப்புக்குள்ளான இவ் வைத்தியசாலை தற்பொழுது புதிய மெருகுடன் செயற்பட ஆரம்பித்துள்ளது. இந்த வைத்தியசாலையை கொழும்பில் உள்ள ஆசிரி, நவலோக, அப்பலோ ஆகிய வைத்தியசாலைகளின் தரத்திற்கு கட்டியெழுப்ப வடபகுதி கூட்டுறவு சமூகம் முன்வரவேண்டும் என சங்கானைப் பிராந்திய சபை உபதலைவர் திரு. சி. இராமச்சந்திரா வேண்டுகோள் விடுத்தார்.

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத் தலைவர் திரு.எஸ்.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற 83வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவிலேயே இவ்வேண்டுகோளினை அவர் விடுத்தார்.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது சமுதாயம் நோய்வாய்ப்பட்ட சமூகமாக மாறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்கிறது. இந்நிலையில் ஆயுள்வேதம், ஹோமியோபதி, அக்குபஞ்சர் போன்ற வைத்தியமுறைகளை நாம் மீண்டும் முன்னணிக்கு கொண்டுவர வேண்டும். ஹோமியோபதி வைத்தியம் தென் இலங்கையில் பிரபல்யமாய் உள்ளது. அதேபோல் எமது பகுதியில் அக்குபஞ்சர் வைத்தியம் நல்ல நிலையில் எமது மக்கள் பயன்பெறும் வகையில் வளர்ந்துவருகிறது.

கூட்டுறவாளர்களின் பிரசார ஏடான ஐக்கிய தீபம் பத்திரிகையை ஒவ்வொரு கூட்டுறவாளனும் படித்துப் பயன்பெறும் பொருட்டு கூடிய பக்கங்களில் வெளியிட்டு மக்கள் அனைவரும் வாசிக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். தற் போது வெளிவரும் ஐக்கியதீபம் பத்திரிகையின் தரம் வடிவமைப்பு பெருமளவில் மாற்றத்துக்கு உட்பட்டு வெளிவருகின்றது. இதனை அனைவரும் வாசித்து பயன்பெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.


**யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை (வது)**
**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்**
**1000 கதிரைகளுடன் வாடகைக்கு விடுதல்**

☞ உங்கள் திருமண வைபவங்களையும்,
☞ உங்கள் பிள்ளைகளின் நாட்டிய, இசை அரங்கேற்றங்களையும்,
☞ கலை, கலாசாரவைபவங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள்,
மற்றும் பயிற்சிப் பட்டறைகள் ஆகியவற்றை குறைந்த செலவில் நிறைந்த மனதுடன் சிறப்புற நடத்தி முடிப்பதற்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினை நாடுங்கள்."

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர்
வீரசிங்கம் மண்டபம் 2 ம் மாடி ,
இல:12 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
*என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு உங்கள் மண்டபத் தேவைகளைபபூர்த்திசெய்யுங்கள்.*
செயலாளர், *யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை.*


*கொத்தணித்தலைவர், கூட்டுறவுப் பொறுப்பாளர், பா.உ பரிசில் வழங்குகின்றார்கள்*



*வலிகாமம் கொத்தணியின் கூட்டுறவு தின விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள்.*




கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க கூட்டுறவாளர் தின விழாவின்போது பிடிக்கப்பட்ட படங்கள்



ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்க மாதிரி விற்பனை நிலைய திறப்பு விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்கள்



**கூட்டுறவு மாநாட்டில் அதிதிகளாகக் கலந்து கொண்ட அதிகாரிகளதும் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர்களதும், பாராளுமன்ற உறுப்பினர்களதும் விபரம்:**

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் : திரு.க.கணேஷ்

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள்
: திரு.கெ.கனகசபாபதி (அபிவிருத்தி)
திரு.சி.ஐயாத்துரை (ப.தெ.வ.)
திரு.பொ.சிவலிங்கம் (எண்பார்வை)

மக்கள் வங்கி வட.பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்
: திரு.எம்.கே.சிவபாதவிருதயர்

மக்கள் வங்கி யாழ். பிராந்திய உதவிப் பிராந்திய முகாமையாளர்கள்
: திரு.ரீ.கே.ஆனந்தராசா,
திரு.துரைசிங்கம் ரகு

தமிழீழ நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர்: திரு.பொ.இளஞ்சேரன்

தமிழீழ நிர்வாக சேவை யாழ். மாவட்ட பொறுப்பாளர்: திரு.சி.விஜிதரன்

தமிழீழ நிர்வாக சேவை - யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பொறுப்பாளர்
: திரு.பொ.புஸ்பகுமார்

தமிழீழ நிர்வாக சேவை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுப் பொறுப்பாளர்
: திரு.க.மயூரன்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்
: திரு.சுரேஷ் பிரேமச்சந்திரன்,
: திரு.கி.சிவனேசன்
: திருமதி பத்மினி சிதம்பரநாதன்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவன அதிபர்
: திரு. சி. கோணேஸ்வரன்

யாழ்.மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து தலைவர் உட்பட நான்கு இயக்குனர்சபை உறுப்பினர்கள் பேராளர்களாகவும் அவர்களுக்கு உதவியாக சங்கங்களின் பொதுமுகாமையாளர்களும் செயலாளர்களும் கலந்துகொண்டனர்.



ஊர்வலத்தில் ஒரு பகுதியினர்



சுன்னாகம் பழரச தொழிற்சாலையில் தாகசாந்தி



மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கின்றார்

வலி.கிழக்கு
வட பகுதி ப.நோ.கூ.ச
அச்சுவேலி
வாடிக்கையாளர்கட்கும் அங்கத்தவர்கட்கும் ஆற்றிவரும் சேவைகள்

எமது சங்கம்

☆ நுகர்ச்சிப் பொருட்கள் விற்பனை
☆ உலர் உணவுப் பொருட்கள் விநியோகம்
☆ வங்கிச் சேவைகள்
☆ வாடகைக் கதிரைகள் சேவைகள்
☆ மகளிர் மனைப்பொருளியல் சேவைகள்
☆ எரிபொருள் விநியோகம்
☆ கட்டிடப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள் விநியோகம்
☆ தொலைத்தொடர்பு சேவைகள்
☆ ஒப்பந்த வேலைகள்
☆ கல்விச் சேவைகள்
☆ உரம், கிருமிநாசினி விநியோகம்
☆ கோழித்தீன் வகைகள் விநியோகம்
☆ மருந்தக சேவைகள்

மேற்படி தரமான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் எமது நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்

உ.நா. 070-21-2382, 0212225988
வெ.நா. 0094 70 21 2382

வலி.கிழக்கு (வ.ப) ப.நோ.கூ.சங்கம்
அச்சுவேலி



ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முன் மங்கள விளக்கேற்றுகின்றார்கள்



A.C.M. அச்சகத்தில் கணனி அமைப்பும் ஒவ்செற் முறையிலான அச்சுப்பதிவு செய்து இல.12 காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தின் 2 ஆம் மாடியில் இயங்கும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் 2005 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் வெளியிடப்பட்டது.